வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 05.01.2023 வியாழக்கிழமை | இதழ் : 26 | பக்கங்கள் : 16

## தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் ஜனாதிபதியுடன் இன்று சந்திப்பு

### கட்சி தலைவர்களுக்கு ரணில் நேரடி அழைப்பு

கொழும்பு, ஜன. 05
இனப் பிரச்சனைக்கான தீர்வு பேச்சு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை இன்று வியாழக்கிழமை மாலை சந்திப்பு ஒன்றுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.
இந்த சந்திப்பில் பங்கேற்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோவின் செல்வம் அடைக்கலநாதன், புளொட்டின் த. சித்தார்த்தன் ஆகியோருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேரடியாக தொலைபேசி மூலம் அழைப்பு விடுத்துள்ளார் என்று அறிய வருகின்றது.
இனப் பிரச்னை தீர்வுக்கான பேச்சு எதிர்வரும் 10ஆம் திகதி ஆரம்பமாக 15

### யாழ். மாநகர சபை விவகாரம்:

## இணக்கத்துகான ஆளுநரின் அழைப்பை தமிழ் தேசிய கூட்டமைப்பு புறக்கணிக்கும்!

யாழ்ப்பாணம், ஜன. 05
யாழ்ப்பாணம் மாநகர சபையின் நிர்வாக முடக்க விவகாரத்தில் இணக்கம் எட்டுவதற்கு வடக்கு மாகாண ஆளுநர் விடுத்த அழைப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாநகர சபை உறுப்பினர்கள் சிலர் புறக்கணிக்கவுள்ளனர் என்று தெரிவித்தனர்.
யாழ்ப்பாணம் மாநகர சபையின் வரவு - செலவு திட்டம் கடந்த டிசெம்பர் 21ஆம் திகதி தோற்கடிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து கடந்த முதலாம் திகதியுடன் மேயர் மணிவண்ணன் பதவி விலகினார். இந்நிலையில், மாநகர சபையின் நிர்வாகத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதில் சிக்கல் தோன்றியுள்ளது. இது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனை 15

# பிரச்னை தீர்வை ஆதரியுங்கள் - சம்பந்தன்! சாதகமாக பரிசீலனை செய்கிறேன் - மகிந்த!!

## இருவரும் நேற்று திடீர் சந்திப்பு



கொழும்பு, ஜனவரி 05
இனப் பிரச்னைக்கான தீர்வை ஆதரிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தம்மை சந்தித்த பொதுஜன பெரமுனவின் தலைவர் மகிந்த ராஜபக்ஷவிடம் கோரியுள்ளார்.
இதற்கு, தீர்வைப் பொறுத்து அதனை சாதகமாகப் பரிசீலிப்பதாக சம்பந்தனுக்கு மகிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார். 15

## உள்ளூராட்சி தேர்தல் வேட்புமனு வரும் 18ஆம் திகதி முதல் ஏற்பு!

கொழும்பு, ஜன. 05
உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் எதிர்வரும் 18ஆம் திகதி முதல் 21ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.
நீடிக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கு மார்ச் 20ஆம் திகதிக்கு முன்னர உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டும். 15

## உள்ளூராட்சி தேர்தலை பிற்போட பாராளுமன்றில் இன்று யோசனை!

### தயாசிறி ஜயசேகர எம். பி.



கொழும்பு, ஜன. 05
உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை ஒத்திவைப்பதற்கான யோசனை திட்டம் ஒன்றும் இன்று வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. 15

## 200 ரூபாயால் எரிவாயு விலை குறையும்!

கொழும்பு, ஜன. 05
லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை இன்றைய தினம் 200 முதல் 300 ரூபாயால் குறைவடையக்கூடும் என்று லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.
சமையல் எரிவாயு விலை சூத்திரத்துக்கு அமைய ஒவ்வொரு மாதமும் 5 ஆம் திகதி திருத்தப்படுகிறது. இந்த நிலையிலேயே இன்றைய 15

## ஜனாதிபதி ரணில் தலைமையில் யாழில் தேசிய பொங்கல் விழா!

### மயிலிட்டி காணி விடுவிப்பு குறித்தும் அவதானம்

கொழும்பு, ஜன. 05
எதிர்வரும் 15ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் தேசிய பொங்கல் விழா யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.
இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மற்றும் பேச்சுக்கள் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்று வருகின்றன என்று செயலகத்தின் உயர் அதிகாரி ஒருவர் 'ஈழநாடு'வுக்கு தெரிவித்தார்.
பொங்கல் விழாவை யாழ்ப்பாணத்தில் எங்கு நடத்துவது என்று இன்னமும் இறுதி செய்யப்படவில்லை. இது தொடர்பில் அடுத்தடுத்த சந்திப்புகளில் முடிவு செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.
மேலும், பொங்கல் விழாவுக்காக யாழ்ப்பாணம் செல்லும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இராணுவத்தினரின் வசமிருக்கும் உயர்பாதுகாப்பு வலயத்தில் ஒரு பகுதியை விடுவிப்பது தொடர்பிலும் அங்கு நேரில் சென்று அவதானம் செலுத்துவார் என்றும் அந்த அதிகாரி கூறினார். (ஐ)

## இம்மாதம் இறுதிவாரத்தில் அமைச்சரவையில் மாற்றம்!

### நாமல் ராஜபக்ஷவுக்கும் பதவி?

கொழும்பு, ஜன. 05
பல மாதங்களாக தாமதமாகி வந்த அமைச்சரவை மாற்றத்தை இந்த மாதத்தின் இறுதி வாரத்தில் மேற்கொள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.
இதன்படி, புதிதாக 12 அமைச்சரவை அமைச்சர்கள் நியமிக்கப்பட 15

## பரந்த தேர்தல் கூட்டணி சனிக்கிழமை முடிவாகும்!

### தாளம் மாற்றினார் சுமந்திரன் எம். பி.

யாழ்ப்பாணம், ஜன. 05
தமிழ் தேசிய கட்சிகள் ஒன்றிணைந்து போட்டியிடுவது பற்றி நாளை மறுதினம் சனிக்கிழமை மட்டக்களப்பில் நடைபெறவுள்ள இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்படும். இது தொடர்பில் அரசியல்குழு ஒரு சிபாரிசை செய்துள்ளது. இறுதி முடிவு மத்திய செயல் 15

## சரணடைந்த புலிகளுக்கு நடந்தது என்ன? 17ஆம் திகதிக்கு முன்னர் பதிலளிப்போம்!

### இராணுவம் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 05
சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு என்ன நடந்தது என்று எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் பதிலளிப்போம் என்று தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் எழுப்பப்பட்ட கேள்விக்கு இராணுவம் கூறியுள்ளது.
சரணடைந்த புலிகளுக்கு என்ன நடந்தது என்று பத்திரிகையாளர் ஒருவர் தகவல் அறியும் உரிமைச் 15

## உள்ளூராட்சி தேர்தல் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவுக்குள் பிளவு!

கொழும்பு, ஜன. 05
உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான தினம் நெருங்கிக் கொண்டிருக்கும் நிலையில் தேசிய தேர்தல் ஆணைக்குழுவுக்குள் ஏற்பட்டுள்ள பிளவு தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனைகளை பெற அரசாங்கம் தீர்மானித்துள்ளது.
உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான வர்த்த 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது…!

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு காரணம் இங்கே எழுதித்தான் வாசகர்களுக்கு தெரியவேண்டும் என்பதல்ல. நாட்டின் டொலர் கையிருப்பு தீர்ந்துபோனதுதான் பிரச்னையின் ஆரம்பப்புள்ளி.

சுற்றிவர கடலால் சூழப்பட்ட நமது நாடு, மீன் உணவுகளையும் டொலர்கள் செலுத்தி இறக்குமதி செய்துவந்ததற்கு ஓர் அரசியல்வாதி மீது கைகாட்ட முடியாது. அது ஒட்டுமொத்த நாட்டின் நிர்வாகத்தின் குறைபாடு.

அதேபோல நாட்டுக்கு கிடைக்கின்ற டொலர் வருமானம் நின்றுபோனதற்கு பல காரணங்கள். கொரோனா பெருந்தொற்று. ஈஸ்டர் தாக்குதல் என்று பல. அதேவேளை அரசியல் அனுபவமற்ற கோட்டாபய ஜனாதிபதியாகி, தனக்கு வேண்டியவர்களை மாத்திரம் வைத்துக்கொண்டு - அவர்களும் அரசியல் அனுபவமற்றவர்கள் என்பது அடுத்தது, ஆட்சி செய்ததும் நாடு இவ்வளவு விரைவாக நெருக்கடியை சந்திக்கக் காரணமானது.

ஆனால், அந்த நெருக்கடியிலிருந்து வெளியே வர இன்று வரை நாடு போராடிக்கொண்டிருப்பது - நமது நாடு எதிர்கொள்ளும் பூகோள அரசியல்.

சீனாவிடமிருந்து தேவையற்ற செலவுகளுக்காக கடன்களை வாங்கிக் குவித்தார் மகிந்த ராஜபக்ச தனது பத்துவருட ஆட்சியில். மத்தள விமான நிலையம், அம்பாந்தோட்டை துறைமுகம் என்று எதுவித திட்டமும் இல்லாத திட்டங்களுக்கு அவர் வாங்கிக் குவித்த கடன்களை- அதன் வட்டியை கட்டமுடியாத நிலைமை அவருக்கு பின்னர் ஆட்சிக்கு வந்த மைத்திரி - ரணில் தரப்புக்கு ஏற்பட்டபோது, அம்பாந்தோட்டையை சீனாவுக்கு ‘தாரை வார்ப்பதை’ தவிர வேறு வழியிருக்கவில்லை.

ஆனால், அவ்வாறு தாரை வார்த்தவர் இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்பதும் அதனாலேயே இன்று வரை அவர் இந்தியாவுடன் ‘மல்லுக்கட்ட’ வேண்டியிருக்கின்றது என்பதும் இரகசியமானதல்ல.

இதனை நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவும் நேற்று ஒப்புக்கொண்டிருக்கிறார்.

‘அம்பாந்தோட்டைத் துறைமுகம் தொடர்பாக சீனாவுடன் செய்துகொண்ட உடன்படிக்கையால் பல நாடுகள் இலங்கையை தனிமைப்படுத்தியுள்ளன’ என்று கூறியுள்ள அவர், இதன் காரணமாகவே சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடனை பெற்றுக்கொள்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்றும் கூறியிருக்கிறார்.

இந்த ஒப்பந்தம் குறித்து விமர்சித்தமையால் தான் அமைச்சர் பதவியில் இருந்து அப்போது நீக்கப்பட்டார் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

இந்தியா முன்னர் ஒருதடவை இலங்கை விவகாரத்தில் நேரடியாக தலையிட்டதும் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டி வந்ததும் ஏன் என்பதும் இரகசியமானதல்ல. அப்போது இந்தியாவின் எதிர் அணியில் இருந்த அமெரிக்காவுக்கு அதன் ‘வொய்ஸ் ஒவ் அமெரிக்கா’ வானொலிக்கென்று இலங்கையில் பல ஆயிரம் ஏக்கர் காணியை வழங்க அப்போதைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா முயன்றபோதே, அதற்கு எதிராக ஈழத்தமிழர் விவகாரத்தை ஆயுதமாகப் பயன்படுத்தி இலங்கையில் இந்தியா கால்பதித்தது.

இப்போது அமெரிக்காவும் இந்தியாவும் கிட்டத்தட்ட ஓரணியில் இருக்கின்றன. எதிரணியில் இருக்கும் சீனாவோடு இலங்கை இன்று கடன்பட்டுவிட்டு ‘சிக்குப்பட்டு’ நிற்கின்றது.

இலங்கையில் சீனாவை கொண்டுவந்து இறக்கியது மகிந்த ராஜாபக்ஷதான் என்றாலும் வேறு வழியின்றி, அவர்களை வேரூன்றி செழித்து வளரவிட்டதில் ரணிலுக்கும் முக்கிய பங்குண்டு. அதனால்தான், அவர் ஆட்சியில் தொடர்வதை இந்தியாவும் அதன் நேச நாடுகளும் இன்றுவரை ரசிக்கவில்லை.

ரணில் இந்தியாவை திருப்திப்படுத்த என்னதான் முயன்றாலும் இந்தியா அவரை ஏற்றுக்கொள்ள தயாராக இருப்பதாகத் தெரியவில்லை. அவரை பிரதமராக நியமித்த கோட்டாபய ராஜபக்ஷ, தனது பதவியிலிருந்து வெளியேறும் முடிவை எடுத்து, அதுகுறித்து இந்தியத் தரப்புக்கு தகவல் சொல்லியபோது - அவர் பதவி விலகும் முன்னர் அப்போது அவரால் நியமிக்கப்பட்ட பிரதமரான ரணிலை பதவியிலிருந்து வெளியேற்றிவிட்டு அவர் பதவி விலகவேண்டும் என்று இந்தியா கேட்டதாகவும் ஆனால், அவர் அதனை செய்யவில்லை என்றும் இந்தியத் தரப்பு கடும் கோபத்தில் இருப்பதாக அப்போது கூறப்பட்டது.

அதிலிருந்து ரணில்மீது இந்தியா இன்றுவரை அதே கருத்தோடுதான் இருக்கின்றது என்பது தெரிந்ததுதான். அதனால்தான் அவர் எத்தனை முயற்சி எடுத்தும் இதுவரை இந்தியாவுக்கு உத்தியோகபூர்வமாக அழைக்க இந்தியா முன்வரவில்லை.

இந்த பூகோள அரசியலில் சிக்குண்டிருக்கும் இலங்கை, இந்தியாவையும் அதன்நட்பு நாடுகளையும் எப்படி சமாளிக்கின்றது என்பதிலேயே நாட்டின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியும்கூட இவற்றில்தான் தங்கியிருக்கின்றது என்பதும் நமக்கு புரிந்துகொள்ளக்கூடியதே.!

**- ஊர்க்குருவி**

# ரயில் திணைக்களத்தில் உள்ள வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு

**கொழும்பு, ஜன. 05**

**ரயில்வே திணைக்களத்தின் பல்வேறு தரங்களுக்கும் விரைவாக ஆட்சேர்ப்பு மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.**

அதன்படி, 100 ரயில் சாரதிகள், கட்டுப்பாட்டாளர்கள் மற்றும் நிலைய பொறுப்பதிகாரிகள் ஆகியோர் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக திணைக்களத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக 3,000 கனிஷ்ட ஊழியர்களும் உடனடியாக இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

அரசாங்கத்தின் ஒரு இலட்சம் வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் இருந்து இவர்கள் தெரிவு செய்யப்படவுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, பெருமளவிலான ஊழியர்கள் ஓய்வு பெற்றதன் காணரமாக நேற்று முன்தினமும் பல்வேறு ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன. (அ)

# காலமான பாப்பரசருக்கு ஜனாதிபதி அஞ்சலி!



*கொழும்பு, ஜன. 05*

முன்னாள் பரிசுத்த பாப்பரசர் 16ஆம் பெனடிக்ட் திருத்தந்தை காலமானதையடுத்து அவருக்கான இரங்கலை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று மாலை கொழும்பிலுள்ள அப்போஸ்தலிக்க தூதரகத்தில் பதிவு செய்தார்.

இலங்கைக்கான வத்திக்கான் அப்போஸ்தலிக்க தூதுவர் புனித பிரையன் உடேக்வே ஆண்டகையை சந்தித்த ஜனாதிபதி, அவருடன் சிறு உரையாடலில் ஈடுபட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அங்கு வைக்கப்பட்டுள்ள விசேட நூலில் குறிப்பு ஒன்றை இட்டதுடன், பதினாறாம் பெனடிக்ட் பரிசுத்த பாப்பரசரின் திருவுருவப்படத்துக்கும் அஞ்சலி செலுத்தினார். (ஐ)

# மாணவிமீது பாலியல் வன்கொடுமை பொலிஸ் உத்தியோகத்தருக்கு மறியல்!

*வடமராட்சி, ஜன. 05*

மாணவியை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கிய பொலிஸ் உத்தியோகத்தரை விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பருத்தித்துறையை சேர்ந்த மாணவி ஒருவரை இரு வருடங்களாக இரு பொலிஸார் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தினர் என்று குற்றச்சாட்டில் விசாரணை நடைபெற்றது.

இந்த விசாரணையின் முடிவில் மன்னார் மாவட்டத்தின் பொலிஸ் நிலையம் ஒன்றில் பணியாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

இவரை நேற்று பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்தினர். இதன்போது, எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது. (ஐ-02)

# 4 இந்திய மீனவர்களும் விடுவிக்கப்பட்டனர்!

*யாழ்ப்பாணம், ஜன. 05*

இயந்திரக்கோளாறு காரணமாக வல்வெட்டித்துறை - ஆதிகோயிலடி கடற்கரையில் படகில் கரையொதுங்கியபோது கைது செய்யப்பட்ட நான்கு இந்திய மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

இலங்கை குடிவரவு - குடியகல்வு சட்டத்தை மீறியதாக குற்றம் சாட்டப்பட்ட நான்கு மீனவர்களும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

எவ்வாறாயினும், முன்னதாக அவர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரம் வல்வெட்டித்துறை பொலிஸாரால் மீளப்பெறப்பட்டது.

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்தமை, அனுமதியின்றி மீன்பிடியில் ஈடுபட்டமை ஆகிய இரு குற்றச்சாட்டுகள் இலங்கை நீரியல்வள திணைக்களத்தால் முன்வைக்கப்பட்டன.

மீனவர்கள் குற்றத்தை ஏற்றுக்கொண்ட நிலையில் 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட தலா 6 மாத கால சாதாரண சிறைத் தண்டனை என்ற நிபந்தனையில் அவர்கள் நால்வரும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மீனவர்களின் படகு மற்றும் வலைகளை பறிமுதல் செய்து, அரசுடைமை ஆக்குமாறு பருத்தித்துறை நீதிவான் பொன்னுத்துரை கிரிசாந்தன் உத்தரவிட்டார். (ஐ)

# இம்ரானுக்கு பிணை கையெழுத்திட்ட மூவரை நீதிமன்றில் முற்பட உத்தரவு!

*கொழும்பு, ஜன. 05*

பாதாள உலக மன்னன் கஞ்சிபான இம்ரானுக்காக பிணை கையெழுத்திட்ட மூன்று பேரை நீதிமன்றத்தில் முற்படுமாறு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தினால் நேற்று அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

கஞ்சிபான இம்ரானுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட கொலை முயற்சி வழக்கு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சந்தேகநபரோ அல்லது பிணையாளிகளோ நீதிமன்றில் முற்படவில்லை.

கஞ்சிபான இம்ரான் தற்போது நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளார் என்று ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திகளை, கெசல்வத்தை பொலிஸார் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

இதையடுத்து, சந்தேகநபர் நீதிமன்றத்தில் முற்படத் தவறினால் முழுப் பிணைத் தொகையையும் செலுத்த சம்மதித்து காஞ்சிபான சார்பில் பிணையில் கையெழுத்திட்ட மூவருக்கும் அழைப்பாணை அனுப்ப நீதிமன்றம் உத்தரவிட்டது.

2019 ஆம் ஆண்டு கெசல்வத்தை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்களுக்கு தொலைபேசி ஊடாக கொலை மிரட்டல் விடுத்ததாக தொடரப்பட்ட இந்த வழக்கில் காஞ்சிபானை இம்ரானுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
05.01.2023 வியாழக்கிழமை
பிலவ வருடம், மார்கழி 20

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# ரணிலுக்கான காலக்கெடு?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான பேச்சு மீளவும் இடம்பெறவுள்ளது. கூட்டமைப்பின் கட்சிகள் தங்களுக்குள் முரண்பட்டுவரும் சூழலில்தான், ரணில் விக்கிரமசிங்கவுடனான பேச்சையும் ஓரணியாகவும் கருத்தொற்றுமையுடனும் கையாள வேண்டியவர்களாக இருக்கின்றனர். கூட்டமைப்பின் கட்சிகளிடையேயுள்ள அடிப்படையான முரண்பாடு மக்கள் தொடர்பானதல்ல - மாறாக, கூட்டமைப்பை எவ்வாறு முன்கொண்டு செல்வது, எவ்வாறு தேர்தலை எதிர்கொள்வது என்பதிலேயே கூட்டமைப்பினர் தங்களுக்குள் முரண்பட்டு நிற்கின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலவீனத்தை ரணில் விக்கிரமசிங்க நன்கறிவார். அதேவேளை, இந்தியா மற்றும் மேற்குலகிலிருந்து தமிழர் பிரச்னையை மையப்படுத்தி மட்டும் எவ்வாறான அழுத்தங்கள் வரும், வராது என்பது தொடர்பிலும் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெளிவான பார்வையிருக்கும்.

எனவே, இவ்வாறானதொரு சூழலில் ரணில் விக்கிரமசிங்கவை மிகுந்த எச்சரிக்கையுடனும், நிதானமாகவும் அணுக வேண்டும். பேச்சை நேர்த்தியாக அணுக வேண்டும். வலியுறுத்தும் விடயங்களில் கட்சிகளிடையே கருத்தொற்றுமையும் பரஸ்பர உடன்பாடும் இருக்க வேண்டும். குறுகிய கால, இடைநிலை மற்றும் நீண்டகால அடிப்படையில் விடயங்களைக் கையாள வேண்டும். சர்வகட்சிக் கூட்டத்தின்போது இவ்வாறான அணுகுமுறையை கூட்டமைப்பு வெளிப்படுத்தியிருந்தது. முன்னைய தவறுகளிலிருந்து பாடங்களை படித்துக் கொண்டதன் அனுபவ முதிர்ச்சியை கூட்டமைப்பு முதலாவது சந்திப்பின்போது வெளிப்படுத்தியிருந்தது.

அந்த அணுகுமுறையில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும். பேச்சை எவ்வாறு கையாள வேண்டுமென்று வெளியிலிருப்பவர்கள் கூறலாம். அதில் தவறில்லை. ஆனால்? பேச்சில் தாங்களும் பங்குகொள்ள வேண்டுமென்று கோரிக்கை வைப்பது சரியானதல்ல. அவ்வாறான கோரிக்கையை சிங்கள அடிப்படைவாத அமைப்புகளும் முன்வைக்குமாக இருந்தால் - அதனை நாம் எவ்வாறு எதிர்கொள்ள முடியும்? எனவே, சிவில் சமூகம், மற்றும் புலம்பெயர் அமைப்புகள் பேச்சில் கலந்துகொள்ள வேண்டுமென்று கோருகின்றபோது, அவர்களுக்கு ஏற்றவாறும் கூட்டமைப்பினர் வளைந்து கொண்டிருக்கக்கூடாது. மக்களின் பிரதிநிதிகள்தான் பேச முடியும். விடுதலைப் புலிகள் பேச்சில் பங்குகொண்டபோது, ஒஸ்லோ மேசையில் சிவில் சமூகமும் அமர வேண்டுமென்று எவரும் கோரவில்லை.

அதேவேளை கலந்துரையாடி - சில விடயங்களில் உறுதியான நிலைப்பாட்டை எடுத்தால், அதன் பின்னர் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒழுக்கத்தை கடைப்பிடிக்க வேண்டும். தமிழ் கட்சிகளின் தலைவர்களை நம்பியிருக்காதீர்கள் என்று கூட்டமைப்பிலிருப்பவர்களே பேசுவது சரியானதல்ல. கூட்டமைப்புடன் இணைந்து பயணிப்பது பயனற்றதென்று ஒரு கட்சி கருதினால் கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய பின்னரே தங்களின் நிலைப்பாடுகளை பொதுவெளிகளில் முன்வைக்க வேண்டும். ரணில் விக்கிரமசிங்கவோடு பேசிக் கொண்டு, அதற்கு மாறான கருத்துகளை பொதுவெளிகளில் முன்வைக்கக் கூடாது. இதேபோன்று, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தொடர்பில் உறுதியான நிலைப்பாடு இருப்பின், அதில் அனைவரும் கருத்தொருமித்து செயல்பட வேண்டும். பேச்சில் அதனை வலுவாக முன்வைக்க வேண்டும். சம்பந்தன் இந்தக் கருத்தை வலியுறுத்தாது, செல்வம் அடைக்கலநாதன் மட்டும் மத்தியஸ்தத்தை வலியுறுத்தினால் - அதற்கு பெரியளவில் முக்கியத்துவம் இருக்கப் போவதில்லை. இந்த விடயங்களை கருத்தில் கொண்டு, ரணிலிடம் எந்த விடயங்களை முன்வைப்பதாயினும், அதனை கருத்தொருமித்து - தடுமாற்றமின்றி - முன்வைக்க வேண்டும். ரணில் விக்கிரமசிங்கவிற்கு வாய்ப்புகளை வழங்குவதாக கூட்டமைப்பின் அணுகுமுறைகள் இருந்துவிடக்கூடாது.

ரணில் விக்கிரமசிங்க தற்போதுள்ள நெருக்கடி நிலைமையை தனக்கு சாதகமாகக் கருதியே, தேசிய இனப்பிரச்னையை தீர்க்கப் போவதாக கூறுகின்றார். அதே நெருக்கடியை பயன்படுத்தியே, கூட்டமைப்பும் விடயங்களை தந்திரோபாயமாகவும் தூரநோக்குடனும் அணுக வேண்டும். அதேவேளை ரணில் விக்கிரமசிங்கவுடனான பேச்சுகளுக்கு காலக்கெடு இருப்பது கட்டாயமானது. ரணிலின் ஒவ்வொரு நகர்வுகளையும் கவனித்தே விடயங்களை கையாள வேண்டும். ரணிலுக்கு வழங்கும் கால அவகாசத்தால், மாற்றங்கள் நிகழவேண்டும். அவ்வாறில்லாவிட்டால் ரணிலுக்கு காலக்கெடு கொடுப்பதில் பயனில்லை. அதேவேளை, ரணிலால் செய்யவே முடியாத விடயங்களுக்காக ரணிலிடம் எதிர்பார்ப்பதும் தவறானது.

# சர்வதேச திரைப்பட விழா; இன்றைய காட்சியிடல்கள்!

யாழ்ப்பாணம், ஜன. 05

8ஆவது யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழா யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் திங்கட்கிழமை ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது.

இன்று நான்காம் நாள் வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆறு குறுந்திரைப் படங்கள் திரையிடப்படவுள்ளன. அத்துடன், 10.15 மணிக்கு 'பேஸ் கவர்' என்னும் சிறப்பு ஆவணத் திரைப்படம் திரையிடப்படும். இது இலங்கையின் காத்தான்குடியில் ஆஷிஃபாவின் வாழ்க்கையைப் பின்தொடரும் ஆவணப்படமாகும். 2019 ஏப்ரலில் தேவாலயங்கள் மற்றும் ஹோட்டல்களில் ஈஸ்டர் ஞாயிறு குண்டு வெடிப்புகளைத் தொடர்ந்து, கிழக்கு மற்றும் பிற பகுதிகளில் வாழும் பெண்களின் கதைகள். அந்த ஊரின் கதையை ஒரு பெண்ணின் கதையாக சொல்லும் படமாகும்.

பகல் 12.45 க்கு சப்டெர்ரேனியா (2021) என்னும் பிரேசில் நாட்டுத் திரைப் படம் திரையிடப்படும். இது பிரேசில் பற்றிய பரிசோதனை பயணமாக அமைந்திருக்கிறது.

அடுத்ததாக மாலை 3.00 மணிக்கு ஆறு குறுந்திரைப் படங்கள் திரையிடப்படவுள்ளது. மாலை 4.15 மணிக்கு இலங்கைத் திரைப் படமான சோல்டட் பொப்கோன் திரைப்படம் திரையிடப்படவுள்ளது. இது ஜேகப் லூக் ஜெறோஸன் என்கிற புது முக இயக்குநரின் கன்னி முயற்சியாகும்.

இறுதியாக மாலை 6.30 லோலா (2019) என்னும் பெல்ஜியம் - பிரான்ஸ் நாட்டு திரைப்படம் திரையிடப்படவுள்ளது. இது ஒரு வளர்ப்பு இல்லத்தில் வசிக்கும் 18 வயது திருநங்கை லோலா, தனது தாயின் மரணத்தை அறிந்து, தனது தாயின் கடைசி ஆசையை தந்தையுடன் நிறைவேற்ற முடிவு செய்வதை அடிப்படையாகக் கொண்டது.

இக்காட்சிகள் அனைத்தையும் அனைவரும் இலவசமாகக் காண முடியும். (ஐ)

### தேசிய நடனப் போட்டி

# இராமநாதன் மகளிர் மாணவிக்கு முதலிடம்!



யாழ்ப்பாணம், ஜன. 05

அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட தேசிய நடனப் போட்டியில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மாணவி தனி நடனத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.

கடந்த டிசெம்பர் 28ஆம் திகதி அநுராதபுரம் சொர்ணபாலி பாடசாலையில் இந்தப் போட்டி நடைபெற்றது.

உயர்தரப் பிரிவு - தனி நடனம் - வர்ணத்தில் சுரேந்திரகுமார் தாம்ஜா என்ற மாணவியே முதலாம் இடத்தைப் பெற்றார். (ஐ)

# வடக்கு நீர்ப்பாசன திணைகளத்தின் புதிய பணிப்பாளராக சுதாகரன்!



யாழ்ப்பாணம், ஜன. 05

வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக எந்திரி நவரட்ணம் சுதாகரன் கடந்த 2ஆம்திகதி திங்கள்கிழமை காலை பதவி ஏற்றுக் கொண்டார்.

இவர் ஆரம்பத்தில் வவுனியா மாவட்டத்தில் செட்டிக்குளம் பிரிவு பொறியிலாளராக பதவி வகித்தார். 2008 ஆண்டில் கிளிநொச்சி பிராந்திய பணிப்பாளராக பொறுப்பேற்கும் இரணைமடுகுளம் புனரமைப்பு மற்றும் கல்மடுகுளபுனரமைப்ப என பாரிய வேலைத்திட்டங்களை நிறைவேற்றினார். 2019.03.08 இருந்து 31.12.2022 வரை முல்லைத்தீவு பிராந்திய பணிப்பாளராக கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மாட்டிறைச்சியுடன் நாவாந்துறையில் நால்வர் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 05


சட்டவிரோதமாக மாட்டை இறைச்சியாக்கிய நான்கு பேரை யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினர் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் டெங்கு நோய் கட்டுப்பாட்டுக்காக நாவாந்துறை பகுதியில் வீட்டு தரிசனத்தில் அப்பகுதிக்கு பொறுப்பான பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ். உதயபாலா தலைமையில் படையினர் பொலிஸாரும் இணைந்து சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அந்தச் சமயம், வீடு ஒன்றில் மாட்டை இறைச்சியாக்கியதை அவதானித்து அங்கிருந்தவர்களை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 154 கிலோ மாட்டிறைச்சியும் கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம் பொலிஸார் ஊடாக நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**ஜனவரி - 05** வியாழக்கிழமை
சுபகிருது வருடம் - மார்கழி 21
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 06.00 - 07.30
திதி : சதுர்த்தசி




**மேடம்**
உங்கள் செயல் திறனால் நினைத்ததை சாதித்து மகிழ்வீர்கள். வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தினர் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். உற்சாகமான நாள். எதிர்பார்த்த தகவல் வந்து சேரும்.

**இடபம்**
திட்டமிட்டு செயல்படுவீர்கள். உங்கள் ஆற்றல் வெளிப்படும். கடவுள் வழிபாட்டில் மனம் செல்லும். எதிர்பார்த்த தகவல் வந்து சேரும். சிந்தித்து செயல்படுவதால் செலவு குறையும்.

**மிதுனம்**
பழைய பிரச்னை ஒன்று மீண்டும் பெரிதாகும். நண்பர்கள் உதவுவார்கள். திட்டமிட்ட செயலிலும் செலவு அதிகரிக்கும். அலைச்சல் உண்டாகும். பயணத்தில் சங்கடம் தோன்றும்.

**கடகம்**
நினைத்ததை நிறைவேற்றி மகிழ்வீர்கள். எதிர்பாராத வரவால் நிதி நிலை உயரும். நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்னை முடிவிற்கு வரும். புதிய முயற்சி லாபமாகும்.

**சிம்மம்**
எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழிலில் ஏற்பட்ட தடை விலகும். லாபம் அதிகரிக்கும். கடன் தொல்லையில் இருந்து விடுபடுவீர்கள். புதிய முயற்சி ஒன்றில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கன்னி**
குடும்பத்தினர் நலனில் கவனம் செலுத்துவீர்கள். சொத்து வாங்கும் முயற்சி பலிக்கும். பிள்ளைகள் செயல்களால் சங்கடத்திற்குள் ஆளாவீர்கள். மனதில் குழப்பம் உண்டாகும்.

**துலாம்**
உங்கள் செயல்களில் கவனம் தேவை. புதிய முயற்சி இன்று வேண்டாம். வெளியூர் பயணங்களில் சங்கடங்களை சந்திப்பீர்கள். செயலில் குழப்பம் ஏற்படும்.

**விருச்சிகம்**
தம்பதிகளுக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடு விலகும். மகிழ்ச்சி அதிகரிக்கும். குடும்பத்தில் ஒருவரின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். உறவினர் ஒருவர் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**தனுசு**
நண்பரின் அவசரம் அறிந்து உதவி செய்வீர்கள். சமூகத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். பூர்வீக சொத்து விவகாரத்தில் ஏற்பட்ட பிரச்னைகளைப் பேசி தீர்ப்பீர்கள்.

**மகரம்**
தடைப்பட்ட செயலை செய்து முடிப்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். நேற்றைய எண்ணம் ஒன்று நிறைவேறும். உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும். எதிர்பாராத லாபம் உண்டாகும்.

**கும்பம்**
எதிர்பாராத பயணம் ஏற்படும். நண்பர்கள் தக்க சமயத்தில் உதவி செய்வார்கள். தடைபட்ட ஒரு வேலையை செய்து முடிப்பீர்கள். லாபநிலை உண்டாகும்.

**மீனம்**
துணிச்சலுடன் ஒரு செயலில் ஈடுபடுவீர்கள். உங்கள் எதிர்பார்ப்பு பூர்த்தியாகும். உங்கள் பேச்சுக்கு வெளியிடத்தில் மதிப்பும் மரியாதையும் உண்டாகும். உறவினருடன் ஏற்பட்ட பகை விலகும்.

# கஞ்சிபான இம்ரான் குழுவை கைது செய்து நாடு கடத்துக!

## பன்னீர்செல்வம், வலியுறுத்து

*சென்னை, ஜன. 05*

“இலங்கையை சேர்ந்த சர்வதேச போதைப் பொருள் கடத்தல் தலைவன் கஞ்சிபான இம்ரான் மற்றும் அவரது கூட்டாளிகளை உடனடியாக கைது செய்து, நாடு கடத்த வேண்டும்“ என முன்னாள் முதல்வர் பன்னீர்செல்வம் வலியுறுத்தி உள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில்,

தமிழகத்தில் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக சட்டத்தின் ஆட்சி நடக்கவில்லை. சட்ட விரோதிகளின் ஆட்சி நடக்கிறது. பயங்கரவாதிகளுக்கும், சமூக விரோதிகளுக்கும் புகலிடமாக தமிழகம் விளங்குகிறது. பொது மக்கள் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை நிலவுகிறது.

தி.மு.க., சார்பில் சென்னையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தி.மு.க. இளைஞர் அணியை சேர்ந்த இருவர் பெண் பொலிஸூக்கு பாலியல் தொல்லை கொடுத்துள்ளனர். ஆளும் கட்சியினரின் தலையீட்டால், அவர்கள் இருவரையும் பொலிஸார் விட்டுவிட்டனர் என்று செய்திகள் வந்துள்ளன.

இது, பாலியல் குற்றத்துக்கு தி.மு.க., அரசு துணை போவதற்கு சமம். தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீரழிகிற நிலையில், சர்வதேச போதைப் பொருள் கடத்தல் தாதா கஞ்சிபான இம்ரான் மற்றும் அவரது கூட்டாளிகள், தமிழகத்திற்குள் ஊடுருவி இருப்பதாக வந்த செய்தி அதிர்ச்சி அளித்துள்ளது.

கஞ்சிபான இம்ரான் மற்றும் அவரது கூட்டாளிகளை, உடனடியாக கைது செய்து, நாடு கடத்த துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றுள்ளது.

# சிதம்பரம் நடராஜர் ஆலயத்தை கையகப்படுத்தும் எண்ணம் இல்லை!

## அமைச்சர் சேகர்பாபு

*சென்னை, ஜன. 05*

சிதம்பரம் நடராஜர் கோவிலை கையகப்படுத்தும் எண்ணம் அரசுக்கு இல்லை என அமைச்சர் சேகர்பாபு கூறியுள்ளார். நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

சிதம்பரம் நடராஜர் கோவிலை பொறுத்தவரை எடுத்து வைக்கின்ற ஒவ்வொரு அடியும் மிக அழுத்தமாகவும், ஆதாரப்பூர்வானமான நடவடிக்கைகளை சேகரித்து கொண்டிருக்கிறோம்.

முறைப்பாடுகள் விசாரணைக்கு வந்த போதே நீதிமன்றம் செல்வோம் என்று தீட்சிதர்கள் தரப்பிலே கூறினார்கள். அவர்கள் நீதிமன்றுக்கு செல்வார்கள் என்று எதிர்பார்த்தோம். ஆனால், இதுவரைக்கும் அவர்கள் நீதிமன்றம் செல்லவில்லை. அடுத்தகட்ட ஆய்வுக்கான நகர்வுகளை துறையின் செயலாளர், ஆய்வாளர் செய்து கொண்டிருக்கிறார்கள். திருக்கோவிலில் அத்துமீறல்கள் இருப்பது தகுந்த ஆதாரங்களோடு ஏற்படுத்தப்பட்ட பிறகு உறுதியான நடவடிக்கை எடுக்கப்படும். சிதம்பரம் நடராஜர் கோவிலை பொறுத்தவரை அரசுக்கு கையகப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் இல்லை. பக்தர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதே - என்றார்.

# உணவு திட்டம் நிறுத்தம் மத்திய அரசுக்கு கண்டனம்!

*சென்னை, ஜன.05*

ஏழைகளுக்கான உணவுத் திட்டத்தை மத்திய அரசு நிறுத்தியதற்கு கே. எஸ். அழகிரி கண்டனம் தெரிவித்துள்ளார்.

தமிழக காங்கிரஸ் குழுவின் சார்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில்,

தேசிய உணவு பாதுகாப்பு சட்டப்படி, பிரதமரின் ஏழைகளுக்கான உணவுத் திட்டத்தில், கடந்த 2 ஆண்டுகளாக 10 கிலோ உணவு தானியங்களைப் பெற 81 கோடி இந்தியர்கள் தகுதி பெற்றிருந்தனர். ஆனால், தற்போது அவர்கள் 5 கிலோ உணவு தானியங்களை மட்டுமே பெற முடியும். வழக்கம்போல் மாநில அரசுகளிடம் கலந்தாலோசிக்காமலும், பாராளுமன்றத்தில் இது குறித்து விவாதிக்காமலும் இந்தத் திட்டத்தை இரத்து செய்து தன்னிச்சையான முடிவை பிரதமர் எடுத்துள்ளார்.

இத்தகைய முடிவின் மூலம் ஒரு இலட்சம் கோடி ரூபாயை சேமித்து மோடி அரசு தான் உண்மையான பயனாளராக மாறியிருக்கிறதே தவிர, குடும்ப அட்டைதாரர்கள் அல்ல. ஏழை மக்களுக்குத்தான் கூடுதல் செலவு ஏற்படப் போகிறது.

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியிலிருந்ததை விட, ஒவ்வொரு அடிப்படை அத்தியாவசிய பொருட்களின் விலையும் இன்றைக்குப் பெருமளவு உயர்ந்துள்ளது.

பெரும்பாலான இந்தியர்களின் வருவாய் அதிகரிக்கவில்லை. ஆனால் வேலையின்மை விகிதம் இதுவரையில்லாத அளவுக்குச் சாதனை படைத்துக் கொண்டிருக்கிறது.

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தை மீறுவதை மோடி அரசு உடனடியாக நிறுத்த வேண்டும் - என்றுள்ளது.

(ஐ)

# ஆளுநரின் உரைக்கு அமைச்சரவை அனுமதி!

*சென்னை, ஜன. 05*

சட்டப்பேரவையில் ஆளுநர் நிகழ்த்தும் உரையில் இடம் பெறும் அரசின் கருத்துகள், திட்டங்களுக்கு ஒப்புதல் அளிப்பதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைச்சரவை கூட்டம் நேற்று காலை நடைபெற்றது.

தமிழக சட்டப்பேரவையின் இந்த ஆண்டின் முதல் கூட்டம், வரும் 9ஆம் திகதி தொடங்குகிறது. முதல் நாளில் பேரவையில் ஆளுநர் ஆர்.என். ரவி உரையாற்றுகிறார். இந்த முறை, அவர் தமிழில் உரையாற்றவுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது. மரபுப்படி, ஆளுநர் உரையில் இடம் பெறும் கருத்துகள், திட்டங்களுக்கு தமிழக அமைச்சரவையில் ஒப்புதல் அளிக்க வேண்டும்.

இந்நிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தமிழக அமைச்சரவைக் கூட்டம் இன்று காலை 11 மணிக்கு தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இதில் ஆளுநர் உரையில் இடம்பெறும் கருத்துகள், திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதாக தலைமைச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

# கோப்பாய் பகுதி வீடொன்றில் கத்தி முனையில் கொள்ளை!

*யாழ்ப்பாணம், ஜன. 05*

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கத்தி முனையில் சுமார் 20 இலட்ச ரூபாய் பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றில் நள்ளிரவு வேளை கூரிய ஆயுதங்களுடன் புகுந்த நான்கு பேர் அடங்கிய கொள்ளைக் கும்பல் வீட்டில் இருந்தோரை கத்தி முனையில் மிரட்டி 10 பவுண் தங்க நகைகள், ஒரு இலட்ச ரூபாய் பணம் மற்றும் 3 கையடக்க தொலைபேசிகள் என்பவற்றை கொள்ளையடித்து சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதனை அடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# யாசகம் பெறுவோருக்கு நாளாந்தம் 7 ஆயிரம் ரூபாய் வரை வருமானம்

*கொழும்பு, ஜன. 05*

கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளில் யாசகம் பெறுபவர்கள் நாளாந்தம் 7 ஆயிரம் ரூபாய் வரை வருமானம் பெறுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாளாந்தம் காலை முதல் மாலை வரை யாசகம் பெறும் இவர்கள், இரவில் சுகபோக வாழ்க்கை வாழ்வதாகவும், நட்சத்திர தரத்திலான ஹோட்டல்களில் கூட உணவு உண்கின்றனர் எனவும் தெரியவந்துள்ளது.

பிரதான வர்த்தக நிலையங்களுக்கு தேவையான இருபது ரூபாய், ஐம்பது ரூபாய், 100 ரூபாய் போன்ற நாணயத்தாள்களை யாசகர்களே வழங்கி வருகின்றனர் எனவும் கூறப்படுகின்றது.

அத்துடன், யாசகத்தை பிரதான தொழிலாக கொண்டு செயற்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

# தேர்தலை ஒத்திப்போட முயன்றால் இரு வழிகளில் பாரிய போராட்டம்!

## அரசுக்கு எதிர்க்கட்சிகள் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 05

**உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு முடிவெடுத்துள்ள நிலையில், ஏதாவது தந்திரோபாயத்தைப் பயன்படுத்தித் தேர்தலை ஒத்திப்போடுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்தால் அதற்கு எதிராக பாரியளவில் இரண்டு கட்டங்களாகப் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு எதிர்க்கட்சிகள் முடிவெடுத்துள்ளன.**

முதலாம் கட்டப் போராட்டமாக நீதிமன்றம் செல்லுதல். வரலாற்றில் முதல் தடவையாக இதில் அதிக எண்ணிக்கையிலான சட்டத்தரணிகள் ஆஜராவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவதாக பாராளுமன்றத்துக்கு வெளியே பாரிய மக்கள் போராட்டம். நாடு பூராகவும் இந்தப் போராட்டங்களை முன்னெடுப்பதென்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. (அ)

# கஞ்சா பற்பசை மூலம் பல் துலக்கும் டயானா!

கொழும்பு, ஜன. 05

தற்போது கஞ்சாவினால் செய்யப்பட்ட பற்பசையை பல் துலக்க பயன்படுத்துவதாக சுற்றுலா இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கஞ்சா பலவிதமான பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய ஒரு ஔடதம் என்று அவர் கூறினார்.

இலங்கையில் கஞ்சாவை பானமாக பயன்படுத்த தாம் ஒருபோதும் முன்மொழியவில்லை எனவும், அதனை ஏற்றுமதிப் பயிராக வளர்த்து இலங்கைக்கு டொலர்களை கொண்டு வருமாறும் அரசாங்கத்திற்கு பரிந்துரைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், தான் போதைப்பொருளுக்கு எதிரானவர் என்றும் அவர் இதன் போது சுட்டிக் காட்டினார். (அ)

# பஸ் கட்டணங்கள் குறைக்கப்படாது!

*கொழும்பு, ஜன. 05*

டீசல் விலை 15 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ள போதும் பேருந்துக் கட்டணங்களில் மாற்றம் இடம்பெறமாட்டாது என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பேருந்துக் கட்டணத்தை குறைப்பதென்றால் டீசலின் விலை 100க்கு நான்கு வீதத்தாலாயினும் குறைவடைய வேண்டும் என்றும் தற்போதைய டீசல் குறைப்பு பேருந்துக் கட்டணத்தை குறைக்குமளவுக்கு போதுமானதாகவில்லை என்றும் அந்த ஆணைக்குழுவின் பேச்சாளர் தெரிவித்தார்.

இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் திருத்தங்களின் போது ஒட்டோ டீசல் லீற்றரொன்றின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டதுடன் அண்மைக்காலத்தில் இருந்த டீசலின் விலை தற்போது 25 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் பஸ் கட்டணத்தை குறைப்பதற்கான தீர்மானம் எடுக்கப்படுமா என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் வகையிலேயே போக்குவரத்து ஆணைக்குழுவின் பேச்சாளர் இவ்வாறு கூறினார்.

எவ்வாறாயினும் எதிர்காலத்தில் பயணிகளுக்கு நிவாரணங்களைப் பெற்றுக்கொடுப்பது சம்பந்தமாக பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# மானிய விலையில் காரைநகரில் நடமாடும் அரிசி விநியோகம்!

*யாழ்ப்பாணம், ஜன. 05*



காரைநகர் கூட்டுறவு சங்கம் ஊடாக நடமாடும் அரிசி விநியோக சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடிகளினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் உணவுப் பாதுகாப்பு மற்றும் போசாக்கை உறுதி செய்யும் நோக்கில் வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் அனுசரணை யில் முதற் கட்டமாக காரைநகர் பிரதேசத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக மானிய விலை யில் தரமான அரிசியை வழங்கும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சந்தை விலையிலும் 50 ரூபாய் விலை குறைத்து மானிய அடிப்படையில் வடக்கு மாகாண மக்களுக்கு அரிசி வழங்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட இச் செயற்றிட்டம் முதல் கட்டமாக காரைநகர் பிரதேசத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த செயற்றிட்டம் மக்களின் பொருளாதார சுமையை ஓரளவுக்கு குறைத்து, உணவுப் பாதுகாப்பு மற்றும் போசாக்கினை உறுதி செய்யும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த திட்டம் தொடர்ச்சியாக மூன்று மாதங்களுக்கு நடைமுறைப்படுத்தப்படும்.

ஆரம்ப நிகழ்வில் வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள், காரைநகர் பிரதேச செயலாளர், காரைநகர் பிரதேச சபைத் தவிசாளர், காரைநகர் கூட்டுறவு சங்க பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# நானு ஓயாவில் ஆலயம் உடைக்கப்பட்டு திருட்டு

*கொழும்பு, ஜன. 05*

நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டெஸ்போட் கீழ்ப் பிரிவில் ஸ்ரீ கருமாரி அம்மன் ஆலயம் உடைக்கப்பட்டு அம்மனின் தங்க நகைகள், உண்டியல் பணம் ஆகியவை திருடப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினால் நானுஓயா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும், அத்தோடு சம்பவம் தொடர்பில் இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை எனவும், விசாரணைகளை மேற்கொள்ளும் நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

ஆலயத்தின் பின் நுழைவாயில் உடைக்கப்பட்டு உள்ளே நுழைந்த இனந்தெரியாதவர்கள் ஆலயத்தில் அம்மனுக்கு அணிவிக்கப்பட்டிருந்த தாலி மற்றும் ஆலய முன்றலில் வைக்கப்பட்டிருந்த உண்டியல் என்பவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணகைளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# ரோஹிங்கிய அகதிகளை நாடு கடத்த முற்பட்டவருக்கு விளக்கமறியல் நீடிப்பு!

*யாழ்ப்பாணம், ஜன. 05*

மியன்மார் அகதிகளை நாடு கடத்த முற்பட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நபரின் விளக்கமறியலை எதிர்வரும் 16ஆம் திகதி வரையில் நீடித்து மல்லாகம் நீதவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

இந்தோனேசியாவில் இருந்து படகில் தப்பிச் செல்ல முற்பட்டவேளை கடந்த 17ஆம் திகதி படகு பழுதடைந்ததில் வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் தத்தளித்த நிலையில் 104 ரோஹிங்கிய அகதிகள் இலங்கை கடற்படையினரால் காப்பாற்றப்பட்டு மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதை அடுத்து அவர்களை மீரிஹான தடுப்பு முகாமில் தடுத்து வைக்க நீதிமன்று உத்தரவிட்டது.

அதேவேளை, இவர்களை நாடு கடத்த முற்பட்டவர் என ஒருவருக்கு எதிராக காங்கேசன்துறை பொலிஸாரினால் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அதனை அடுத்து மேற்கொள்ளப்பட்ட நீதிமன்ற விசாரணைகளை அடுத்து அவரை கடந்த 2ஆம் திகதி வரையில் வைக்குமாறு விளக்கமறியலில் நீதிமன்று உத்தரவிட்டது.

கடந்த 2ஆம் திகதி குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதை அடுத்து, சந்தேகநபரின் விளக்கமறியல் எதிர்வரும் 16ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளது. (அ)

# இலங்கைக்கு ஐ.நா. உதவிகள் தொடரும்

## உதவிச் செயலாளர் கன்னி விக்னராஜா தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 05

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு வழங்கப்படும் உதவிகள் தொடரும் என்று உறுதியளித்தார் ஐக்கிய நாடுகள் சபையின் உதவிப் பொதுச் செயலாளரும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் உதவி நிர்வாக அதிகாரியும் ஐ.நா. அபிவிருத்தி செயற்திட்டத்தின் ஆசிய, பசுபிக் பிராந்தியப் பணியகத்தின் பணிப்பாளருமான கன்னி விக்னராஜா.

இலங்கையின் சமூக அரசியல் அபிவிருத்திக்கான திட்டங்களையும் அவர் பாராட்டியுள்ளார்.

பிரதமர் தினேஸ் குணவர்த்தனவை அலரி மாளிகையில் சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை மீண்டும் சரியான பாதையில் பயணிப்பதைப் பாராட்டுவதாகத் தெரிவித்த அவர், ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு வழங்கப்படும் உதவிகள் தொடரும் என்றும் உறுதியளித்தார்.

இலங்கையில் நிலையான அபிவிருத்தி இலக்குகள், பசுமைப் பொருளாதாரம், சமூக நல்லிணக்கம் மற்றும் சமூகப் பாதுகாப்பிற்கான அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப் படுத்துவது குறித்து அவர் கலந்துரையாடியதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் நீண்டகால உள்கட்டமைப்பு அபிவிருத்திக்கான திட்டங்கள் குறித்தும் அவருக்குத் தெரிவித்த பிரதமர், நல்லிணக்கச் செயற்பாட்டின் முன்னேற்றத்தையும் சுட்டிக்காட்டினார். (அ)





# உள்ளூராட்சித் தேர்தலில் சஜித் - சந்திரிகா கூட்டணி!

கொழும்பு, ஜன. 05

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும், சந்திரிகா தலைமையிலான அணி ஒன்றும் இணைந்து களமிறங்கவுள்ளன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக இருவரும் விரைவில் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர் என்று அறிய முடிகின்றது.

மொட்டுக் கட்சியில் இருந்து விலகி சுயாதீனமாகச் செயற்படும் அநுர பிரியதர்சன யாப்பா - சந்திம வீரக்கொடி உள்ளிட்ட அணியினர் சந்திரிகாவுடன் இணைந்து போட்டியிடவுள்ளனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

# 12 பேர் புதிய அமைச்சர்கள் வஜிரவுக்கும் அமைச்சு பதவி?



கொழும்பு, ஜன. 05

இம்மாத இறுதியில் 12 புதிய அமைச்சரவை அமைச்சர்களும் ஆறு ஆளுநர்களும் நியமிக்கப்படவுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகள் கிடைக்குமெனவும் அந்த வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன. ஸ்ரீலங்கா பொதுஜன பெர முனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் குழுவுக்கு இதற்கு முன்னர் அமைச்சுப் பதவிகள் வழங்கப் படவிருந்தபோதிலும் அது தாமதமானது.

மேலும், ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தனவுக்கும் அமைச்சுப் பதவி வழங்கப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

# யால தேசிய சரணாலயத்தின் வரலாற்றில் அதிக வருமானம்!

கொழும்பு, ஜன. 05

யால தேசிய சரணாலயத்தின் வரலாற்றில் அதிகளவான வருவாய் நேற்று ஈட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய, ஒரு கோடியே 2 லட்சத்து 64 ஆயிரத்து 179 ரூபா வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

நேற்றைய உள்ளூர் சுற்றுலாப் பயணிகளை விடவும் அதிகளவான சர்வதேச சுற்றுலாப் பயணிகள் யால தேசிய சரணாலயத்துக்குச் சென்றுள்ளனர்.

இதன்படி 912 சர்வதேச சுற்றுலாப் பயணிகளும் 682 உள்ளூர் சுற்றுலாப் பயணிகளும் யால தேசிய சரணாலயத்துக்கு சென்றுள்ளனர்.

கடந்த டிசெம்பர் மாதம் 23 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரையில் யால தேசிய சரணாலயத்தை பார்வையிடுவதற்காக அதிகளவானோர் அங்கு சென்றிருந்ததாக வன ஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# புதிய வரி திருத்தங்களுக்கு எதிராக மருத்துவ அதிகாரிகள் சங்கம் மனு

கொழும்பு, ஜன. 05

புதிய வரி திருத்தங்களுக்கு எதிரான மனுவொன்றை அடுத்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளிக்கவுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த மனுவில் கையொப்பமிடும் பணியை ஆரம்பித்துள்ளதாகவும், எதிர்வரும் ஜனவரி மாதம் 11 ஆம் திகதி ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நிறைவேற்று உறுப்பினர் வைத்தியர் சம்மில் விஜேசிங்க ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

20,000 வைத்தியர்களின் கையொப்பங்களைப் பெறுவதற்கு எதிர்பார்த்துள்ளதாக வைத்தியர் விஜேசிங்க கூறினார்.

புதிய வரித் திருத்தங்களுக்கு எதிராக மருத்துவர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் பல சங்கங்கள் ஏற்கனவே போராட்டங்களை ஏற்பாடு செய்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய வரித் திருத்தங்களை ரத்து செய்து அனைவருக்கும் நியாயமான வரிக் கொள்கையை முன்வைக்குமாறு அதிகாரிகளிடம் கோரிக்கை விடுப்பதாக அவர் தெரிவித்தார்.

முதற்கட்டமாக ஜனாதிபதியின் தலைவீட்டை நாடவுள்ளதாக வைத்தியர் விஜேசிங்க மேலும் கூறினார். (அ)

# அதிவேக நெடுஞ்சாலை பஸ் கட்டணம் குறைப்பு

கொழும்பு, ஜன. 05

நாட்டில் அதிவேக நெடுஞ்சாலைகளுக்குள் பிரவேசிக்கும் பஸ்களுக்கான பயணிகள் கட்டணங்கள் 10 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் நேற்று நள்ளிரவு முதல் குறித்த நடவடிக்கை அமுலுக்கு வருவதாக போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அத்தோடு அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் பஸ்களில் அதிக சத்தத்துடன் பாடல்கள் ஒலிக்கப்படுவது தொடர்பில் 1955 என்ற இலக்கத்திற்கு தங்களது முறைப்பாடுகளை பதிவு செய்யமுடியும் எனவும் அவர் கூறினார்.



உங்கள் துயரங்களை பகிர்ந்துகொள்ள யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தளம்
துயர் நெற்
THUYAR.NET
துயர் நெற்றில் பிரசுரமாகும் அனைத்து விளம்பரங்களும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும்
ஈழநாடு
Eelanadu
ஈழநாடு தினசரியிலும் வெளியிடப்படும்
யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும்
DAN NEWS
டான் நியூஸ் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகும்
விபரங்களுக்கு: thuyar.net Tel: 0094 752 225 225

# வெற்றிலை சின்னத்தில் மூன்று அணிகள் கூட்டு?

கொழும்பு, ஜன. 05

**உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை எதிர்கொள்ளக் கட்சிகள் பல தயாராகி வருகின்றன. அந்தக் கட்சிகள் கூட்டணி அமைப்பது பற்றிப் பேசுவதும் வேட்பாளர்களை நியமிப்பதும் என தமது அரசியல் செயற்பாட்டை முன்னெடுக்கின்றன.**

அந்த வகையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, விமல் வீரவன்ஸ அணி மற்றும் டலஸ் அழகப்பெரும அணி ஆகியவை ஒன்றிணைந்து கூட்டணியாகக் களமிறங்குவது பற்றிப் பேசி வருகின்றன.

அவை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சின்னமான வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுவதென்ற ஒரு யோசனை முன்வைக்கப் பட்டுள்ளது.

ஆனால், இந்தக் கூட்டணிக்கு யார் தலைவர் என்பதில் சிக்கல் நிலவுகின்றது.

சின்னம் வெற்றிலை எனில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை அடிப்படையாக வைத்துத்தான் கூட்டணி உருவாகும்.

அதற்காக சு.கவின் தலைவரான மைத்திரிபால சிறிசேனவை கூட்டணிக்குத் தலைவராகப் போட முடியாது என்று டலஸ் அணி தெரிவித்துள்ளது.

அதற்குக் காரணம் ஈஸ்டர் தாக்குதல் உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்கள் அவர் மீது உள்ளமைதான்.

அதனால் புதிய தலைவர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்று டலஸ் அணியினர் யோசனை தெரிவித்துள்ளனர்.

சுதந்திரக் கட்சி அதற்குத் தலை அசைத்துள்ளது. தனியாகத் தலைவர் ஒருவரை நியமிக்காமல் தலைமைத்துவ சபை ஒன்றை அமைப்பதற்கு யோசனை ஒன்றும் முன்வைக்கப்பட்டுள்ளது. இருந்தும், இது தொடர்பில் இறுதி முடிவெடுக்கப்படவில்லை. (அ)

# மாற்றத்துக்காக போராடியோர் தேர்தலுக்கு தயாராகவேண்டும்

## சாணக்கியன் எம்.பி. அழைப்பு

கொழும்பு, ஜன. 05

மாற்றத்திற்காக போராடியவர்கள் அனைவரும் தேர்தலுக்கு தயாராகவேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் பகிரங்கமாக அழைப்பு விடுத்துள்ளார்.

உள்ளூராட்சி நிறுவனங்களின் வட்டார எல்லை நிர்ணயத்தை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தலைமையிலான தேசிய எல்லை நிர்ணய குழுவினை நேற்று சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் இவ்வாறு பகிரங்கமாக அழைப்பு விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

மாற்றத்தினை கோரி போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு தற்போது ஜனநாயக ரீதியாக ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது.

இவ்வாறு அவர்களுக்கு கிடைத்துள்ள வாய்ப்பினை அவர்கள் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். எனவே அவர்கள் அனைவரும் ஆர்வமாக இந்த தேர்தலுக்கு தயாராக வேண்டும்.

அரசாங்கத்தில் இருக்கும் ஒரு சிலர் நிதி இல்லை என சொல்லும் நொண்டி சாட்டுகள் தொடர்பில் கரிசனை செலுத்தாமல், அனைவரும் தேர்தலுக்கு தயாராக வேண்டும் - என்றார். (அ)

# கோழி திருடன் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 05

புத்தூர் கிழக்குப் பகுதியில் உள்ள கோழிப்பண்ணை ஒன்றில் 10 கோழிகளை திருடிய 26 வயதுடைய இளைஞன் கைது செய்யப்பட்டார் என அச்சுவேலி குற்றத்தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர் .

திருட்டுச் சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார் என பொலிஸார் கூறினர்.

இரவு நேரம் கோழிப்பண்ணைக்குள் நுழைந்து குறித்த நபர் கோழிகளை திருடியுள்ளார். இதனை அவதானித்த பெண் அச்சுவேலி பொலிஸாருக்கு தகவல் வழங்கியதை அடுத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபர் புத்தூர் கிழக்கு பகுதியைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பிள்ளைகளுக்கு விசம் பருக்கிய தாயாரும் பலி!

கொழும்பு, ஜன. 05

தனது இரண்டு பிள்ளைகளுக்கும் விசம் கொடுத்து, தானும் விசம் அருந்திய தாய் வட்டுப்பிட்டிவல வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

லொலுவாகொட பகுதியைச் சேர்ந்த நிலுகா சஞ்சீவனி (வயது-31) என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார்.

தனது 5, 8 வயதான இரண்டு பிள்ளைகளுக்கும் அவர் விசம் கொடுத்திருந்தார்.இரண்டு பிள்ளைகளும் கொழும்பு ரிட்ஜ்வே சிறுவர் வைத்திய சாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட் டனர். அங்கு 5 வயது பிள்ளை உயிரிழந்தது.

8 வயதான மகள் தொடர்ந்தும் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக கம்பஹா பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# பொலிஸ் உயர்நிலை பதவிகளில் மாற்றம்

## 64 பேருக்கு இடமாற்றம் 19 பேருக்கு பதவி உயர்வு

கொழும்பு, ஜன. 05

7 சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர்கள் மற்றும் ஐந்து பிரதி பொலிஸ்மா அதிபர்கள் உட்பட மொத்தம் 64 சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக காவல்துறை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், 19 சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், பிரதி பொலிஸ்மா அதிபர்களாக உடனடியாக அமுலுக்கு வரும் வகையில், பொலிஸ்மா அதிபர் சந்தன விக்ரமரத்னவினால் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

இடமாற்றம் செய்யப்பட்டவர்கள், தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியின் கீழ் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்.

சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தனவை நிர்வாகத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் பதவிக்கு நியமிக்க பொதுச் சேவைகள் ஆணைக்குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வட மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய மத்திய மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மத்திய மாகாணத்தில் கடமையாற்றிய சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரத்ன சப்ரகமுவ மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் எஸ்.சி.மெதவத்த தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனத்தில் இருந்து துணை சேவைகளுக்கான பொலிஸ் தலைமையகத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்.

மேலும், வடமத்திய மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் கித்சிறி ஜயலத் கிழக்கு மாகாணத்திற்கும், கிழக்கு மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் எம்.டி.ஆர்.எஸ்.தமிந்த வடமத்திய மாகாணத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். சப்ரகமுவ மாகாணத்தின் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபரின் கடமைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மேலும், குற்றப்பிரிவு பிரதி பொலிஸ்மா அதிபர் பி.லியனகே இடமாற்றம் செய்யப்பட்டு பொலிஸ் போதைப் பொருள் பணியகத்துக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ள அதேவேளை, போதைப் பொருள் பணியகத்திலிருந்து பிரதி பொலிஸ்மா அதிபர் ஜே.ஏ.யு.பி. ஜெயசிங்க நுவரெலியா வலயத்துக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபராக மாற்றப்பட்டுள்ளார்.

இதேவேளை, 23 சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், 8 பொலிஸ் அத்தியட்சகர்கள், இரண்டு பெண் உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள் உள்ளடங்களாக 21 உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள் இடமாற்றம் செய்யப்பட்டதாக காவல்துறை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், ஆறு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் பிரதி பொலிஸ் அதிபர்களாகவும், 13 பொலிஸ் அத்தியட்சகர்கள், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களாகவும் பதவி உயர்வு பெற்றுள்ளனர். (அ)

# நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களின் ஊழியர்களுக்கு ஊக்குவிப்பு பணமா?

## அறிக்கையை கோருகிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஜன. 05

நட்டம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படும் இரண்டு நிறுவனங்களில், பணியாளர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்பட்டமை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறித்த நிறுவனங்களிடம் இருந்து அறிக்கையை கோரியுள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஸ்ரீலங்கன் விமான சேவை ஆகிய நிறுவனங்களிடம் இருந்தே ஜனாதிபதி அறிக்கையை கோரியுள்ளதாக ஜனாதிபதி ஊடக பிரிவு தெரிவித்துள்ளது. 2022 மற்றும் 2023ஆம் நிதியாண்டின் அரையாண்டு காலப்பகுதியில், ஸ்ரீலங்கன் விமான சேவைகள் நிறுவனத்தில் 112.8 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த காலப்பகுதியில் ஸ்ரீலங்கன் விமான சேவைகள் நிறுவனம் 170.4 பில்லியன் ரூபாவை வருமானமாக ஈட்டியுள்ளதோடு, 284.5 பில்லியன் ரூபா செலவினம் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

அதேநேரம், இலங்கை கனியவள கூட்டுத்தாபனம், கடந்த வருட ஜனவரி முதல் ஏப்ரல் வரையான காலப்பகுதியில் மாத்திரம் 549 பில்லியன் ரூபா நட்டமடைந்ததாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

கனியவளக் கூட்டுத்தாபனம், இரண்டு மாதங்களுக்கான வேதனத்தை அதன் பணியாளர்களுக்கு வழங்கியுள்ளது.

அதேநேரம், ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம், அதன் ஒவ்வொரு பணியாளருக்கும், மேலதிக கொடுப்பனவாக, ஒரு இலட்சம் ரூபா வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனியவளக் கூட்டுத்தாபனத்தில், 4, 200 ஊழியர்கள் உள்ள நிலையில், உயரதிகாரிகள் மத்தியில், 5 இலட்சம் ரூபா வேதனம் பெறும் அதிகாரிகளும் உள்ளனர்.

அவர்களில் சில அதிகாரிகளுக்கு, 10 இலட்சம் ரூபா மேலதிக கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கன் விமான சேவையில், 5,800 ஊழியர்கள் உள்ள நிலையில், அவர்களுக்கு 13 ஆவது மாதம் எனக் குறிப்பிட்டு, ஒரு இலட்சம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# மீண்டும் உடையும் 'மொட்டு'

கொழும்பு, ஜன. 05

'மொட்டு'க் கட்சிக்குள் மேலும் பிளவு ஏற்பட்டுள்ளது என அக்கட்சியின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதில் இருந்து இன்னோர் அணி பிரிந்து எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து சுயாதீனமாக செயற்படப் போவதாகத் தெரியவருகின்றது.

இந்தக் குழுவின் யோசனைகளை - கருத்துக்களை அரசு புறக்கணித்து நடப்பதாலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அறியமுடிகின்றது.

# இலங்கையின் பொருளாதார சவால்களை 2023இல் வெற்றிகொள்ள முடியுமா?




சர்வதேச நாணய நிதியத்தின் கடன், சீனாவுடனான கடன் மறுசீரமைப்பு, வரி வருமானத்தை அதிகரித்தல், வாழ்க்கை செலவை கட்டுப்படுத்தல், வர்த்தக நடவடிக்கைகள் முடங்குவதை தவிர்த்தல், மின்சார பிரச்னை, மனித உரிமையை பாதுகாத்தல், தேர்தல் நடத்துதல், எதிர்ப்புக்களை கட்டுப்படுத்தல் உள்ளிட்ட புவிசார் அரசியல் ஆகிய பிரச்னைகளை இலங்கை அரசாங்கம் எதிர்நோக்கியுள்ளது.

கடும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள இலங்கை, தீர்க்கப்படாத பல்வேறு பிரச்னைகளுடன் 2023ம் ஆண்டிற்குள் பிரவேசித்துள்ளது.

இந்த பிரச்னைகளுக்கு வெற்றிகரமான தீர்வை தேடுவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஏற்ப, 2023ம் ஆண்டு எதிர்காலத்தை தீர்மானிக்கும் என பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர்.

அதிகரித்து செல்லும் வாழ்க்கை செலவு, வரி சுமை, உர பிரச்னை, நாளாந்த மின்சார வெட்டு, வேலையின்மை பிரச்னை, கடன் வட்டி வீதம் அதிகரித்தல், மனித உரிமை மீறல்கள் ஆகிய பிரச்னைகளினால் 2023ம் ஆண்டில் மக்கள் பெரும் நெருக்கடியை சந்தித்துள்ளனர்.



பல்வேறு பிரச்னைகளை எதிர்நோக்கியுள்ள மக்களுக்கு, இந்த ஆண்டு பல்வேறு சவால்கள் காணப்படுகின்றன.

அதாவது, உணவு தேவைகளை நிவர்த்தி செய்தல், குழந்தைகளை பாடசாலைகளுக்கு அனுப்புதல், மாதாந்த கட்டணங்களை செலுத்துதல், கடன் தவணைகளை செலுத்துதல் ஆகிய அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்துக் கொள்வதிலும் மக்கள் பல்வேறு சவால்களை எதிர்நோக்கியுள்ளனர்.

பொருளாதாரம், கைத்தொழில், மனித உரிமைகள் மற்றும் காலநிலை போன்ற விடயங்கள் இலங்கைக்கு 2023ம் ஆண்டு சவால்மிக்கதொரு ஆண்டாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

### 2023 பொருளாதார சவால்

பாரிய சிரமங்கள், நிச்சயமற்ற நிலைமை, ஏமாற்றங்களுக்கு மத்தியிலான கடந்த ஒரு வருடத்தை பூர்த்தி செய்து, தற்போது 2023ம் ஆண்டுக்குள் பிரவேசித்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடு எதிர்நோக்கிய முன்னெப்போதும் இல்லாத பொருளாதார வீழ்ச்சியை அடுத்து, எம்மில் பெரும்பாலானோர் அனுபவித்த பின்னடைவுகள் மற்றும் எமது அனைவர் மீதும் சுமத்தப்பட்டுள்ள பாரிய சுமை தொடர்பில் தனக்கு நல்ல புரிதல் உள்ளதாகவும் ஜனாதிபதி கூறுகின்றார்.

ஆனால், இந்த மோசமான காலத்தை கடந்து விட்டதாக தான் நம்புவதாகவும், 2023ம் புதிய ஆண்டில் பொருளாதாரத்தின் புதிய திருப்புமுனையை ஏற்படுத்தும் ஒரு தீர்மானமிக்க ஆண்டாக இருக்கும் எனவும் நம்புவதாகவும் ஜனாதிபதி மேலும் குறிப்பிடுகின்றார்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வசதிகள், 2023ம் ஆண்டு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடனேயே அரசாங்கம் இருக்கின்றது. எனினும், 2022ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் தேதி வரை அதற்கான உறுதியான உடன்பாடு எட்டப்படவில்லை.

இந்த உறுதிப்பாட்டை ஜனவரி மாதம் பெற்றுக் கொள்வதும் உறுதியற்ற நிலையாக காணப்படுகின்றது.

இலங்கை நாடாளுமன்றத்தில் கடந்த நவம்பர் மாதம் முன்வைக்கப்பட்ட 2023ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதே அரசாங்கம் எதிர்நோக்கியுள்ள மற்றுமொரு பாரிய சவாலாக காணப்படுகின்றது.

சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட நிறுவனங்களின் ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால், அரசாங்கம் வரவு செலவுத்திட்ட யோசனைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். இதன்படி, வருமானத்தை 63 வீதத்தினால் அதிகரித்துக்கொள்வதற்கு, அரசாங்கம் வரி வருமானத்தை அதிகரிக்க வேண்டியுள்ளது.

வரி வருமானத்தை அதிகரித்துக்கொள்ளாவிடின், அரசாங்கம் தனது இலக்கை நோக்கி செல்ல முடியாத நிலைமை ஏற்படும்.

நாட்டிற்குள் உள்நாட்டு உற்பத்தியின் பெறுமதி 85 பில்லியன் டாலராக காணப்படுகின்றது. இந்த உள்நாட்டு உற்பத்தி 2023ம் ஆண்டு 9.2 வீதத்தால் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் படி, 50 பில்லியன் டாலரினால் இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

தொழிற்சாலைகள் மேலும் மூடப்படுமாயின், வேலையில்லா பிரச்னை மேலும் வலுவடையும் அபாயம் காணப்படுகின்றது.



"2022ம் ஆண்டை விடவும், 2023ம் ஆண்டு சிரம மான ஆண்டாக இருக்கும். பாரதூரமானது, நாம் எட்டும் தீர்மானத்திற்கு அமையவே, நாளைய தினம் தீர்மானிக்கப்படும்" என வடமேல் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ மற்றும் நிதி பீடத்தின் பேராசிரியர் அமிந்த மெத்சிறி பெரேரா தெரிவிக்கின்றார்.

"நாம் இன்று கடனை செலுத்துவதில்லை. நாம் இன்று டாலரை கட்டுப்படுத்தி வைத்துள்ளோம். டாலரை நெகிழ்வு தன்மையாக விடும் பட்சத்தில், எதிர்வரும் மார்ச் மாதம், அதன் பெறுமதி 550 ரூபாவாக காணப்படும்.

டாலரின் பெறுமதி 550 ரூபாவாக அதிகரிக்கும் பட்சத்தில், மீண்டும் பெட்ரோலின் விலை அதிகரிக்கும். பெட்ரோலிய கூட்டுதாபனம் நட்ட மடையும். தமது சொத்துக்களை விற்பனை செய்து, 3 பில்லியன் டாலரை பெற்றுக்கொள்ள அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

தொழிற்சங்கங்கள் அதற்கு இடமளிக்க போவதில்லை. பெட்ரோலிய தொழிற்சங்கங்கள் மற்றும் துறைமுக தொழிற்சங்கங்கள் எதிர்ப்பில் ஈடுபடும் பட்சத்தில், எமது வர்த்தக நடவடிக்கைகள் மீண்டும் வீழ்ச்சி அடையும். சுற்றுலாத்துறை வீழ்ச்சி அடைந்து, அனைத்தும் இல்லாது போகும்" என பேராசிரியர் அமிந்த மெத்சிறி பெரேரா கூறுகின்றார்.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் 75 வீதத்தால் மின்சார கட்டணம் அதிகரிக்கப்பட்ட நிலையில், இந்த ஆண்டு ஜனவரி மாதம் மீண்டும் மின்சார கட்டணத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

"65 வீதத்தால் மின்சார கட்டணம் அதிகரிக்கப்படும் பட்சத்தில், எமது ஆடை கைத்தொழில் துறை இல்லாது போகும். மறுபுறத்தில் ஏற்றுமதி தடைப்படும். உற்பத்தி செலவு அதிகரிக்கும்"

"இது சிக்குண்டுள்ள நூல் பந்தாகும். நுணிப் பகுதி எங்குள்ளது என்பதனை முதலில் தேட வேண்டும். முறையாக அதனை அவிழ்க்க வேண்டும். ஒவ்வொருவரின் தேவைக்கு ஏற்றவாறு, அங்காங்கே அவிழ்க்க முற்பட்டால், இந்த நூல் பந்து மேலும் சிக்குண்டுவிடும். மேலும் சிக்குண்டுள்ளதே தவிர, இதுவரை நுணிப் பகுதியை தேடவில்லை" என பேராசிரியர் அமிந்த மெத்சிறி பெரேரா தெரிவித்துள்ளார்.

### மீண்டுமொரு போராட்டம் வெடிக்குமா?

வாழ்க்கை செலவு, அரசாங்கத்தின் அடக்குமுறை ஆகியவற்றுக்கு எதிராக தொடர்ந்தும் போராட்டங்கள் மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

"நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சிறப்புரிமை வழங்குதல், முக்கிய அரசியல்வாதிகள் அந்த சலுகைகளுடன் வாழ முயற்சித்தால், மக்களின் பிரச்னைகளுக்கு பதில் கிடைக்காது. இதற்கு பதில் வழங்க தவறும் பட்சத்தில், அடுத்த இரண்டு தலைமுறையும் போராட்டத்தில் களமிறங்கும்" என பேராசிரியர் அமிந்த மெத்சிறி பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

"உண்பதற்கு உணவு இல்லாமல், குழந்தைகளை பாடசாலைகளுக்கு அனுப்பாமல், சொத்துக்களை இழக்க வேண்டிய நிலைமை ஏற்படுமானால், அடுத்த போராட்டங்கள் நடத்தப்படும் என அவர் கூறுகின்றார். இந்த



இடத்தில் எமது வங்கி கட்டமைப்பு வீழ்ச்சி அடையும் சந்தர்ப்பங்கள் அதிகமாக காணப்படுகின்றன. மக்கள் ஒன்றிணைந்து கடனை செலுத்தாது இருந்தால், வரி செலுத்தாது இருந்தால், காலி முகத்திடல் போராட்டத்தை விடவும் போராட்டம் தீவிரமடையும்" என அவர் மேலும் குறிப்பிடுகின்றார்.

"கடந்த ஆண்டு நாங்கள் பிரச்னைக்கு உரிய தீர்வை காணவில்லை. தீர்வுக்காக சர்வதேச நாணய நிதியத்தை மாத்திரம் பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள். எனினும், தீர்வு இல்லை. இன்று வரை அது உறுதிப்படுத்தப்படவில்லை. மக்கள் அது தெரியாது. எங்களிடம் எரிபொருள் உள்ளது. எரிவாயு இருக்கின்றது. வரிசைகள் கிடையாது. அதனால், பிரச்னை முடிவடைந்து விட்டது என மக்கள் நினைக்கின்றார்கள்.

இரண்டு அல்லது இரண்டரை மணித்தியாலங்கள் மின்வெட்டு காணப்படுகின்றது. மக்கள் அதற்கு

(09ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையின் பொருளாதார சவால்களை....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது பழக்கப்பட்டு விட்டார்கள். அதற்கு தீர்வு கிடையாது. நாளுக்கு நாள் வீழ்ச்சி அடைகின்றோம்." என அவர் கூறுகின்றார்.

"இந்த ஆண்டும் இவ்வாறே பொருளாதாரத்தை கொண்டு செல்ல எதிர்பார்த்திருந்தால், மக்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதமளவில் நிச்சயமாக வீதிக்கு இறங்குவார்கள். மக்கள் உணவின்றி ஒரு புறத்தில் வீதிக்கு இறங்குவார்கள். வரி உள்ளிட்ட ஏனைய பிரச்னைகளுக்காக தொழிற்சங்கங்கள் வீதிக்கு இறங்கும். இடைநடுவில் நிறுத்தப்பட்ட போராட்டத்தை புதிய தலைமுறையினர் கையில் எடுப்பார்கள். அவ்வாறு கையில் எடுக்கும் பட்சத்தில், இந்த நாடு முழுமையாக இல்லாது போயிவிடும்" என பேராசிரியர் அமிந்த மெத்சிறி பெரேரா தெரிவிக்கின்றார்.

"ஜனவரி மாதமாவது பாரவாயில்லை. தீர்வை பெற்றுக்கொள்வதற்கான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் எடுக்கும் பட்சத்தில், குறைந்தது ஒரு சிறிய கட்டுப்பாட்டையாவது எடுக்க முடியும். அரசாங்கத்தின் முடிவிலேயே அது இருக்கின்றது" என அவர் கூறுகின்றார்.

**மனித உரிமை சவால்கள்**

2023ம் ஆண்டு சாதாரண பொதுமக்களுக்கு உணவு இருக்குமா? மருந்து இருக்குமா? எதிர்ப்புக்கள் காணப்படுமா? அரசாங்கத்தின் அடக்குமுறை எவ்வாறு இருக்கும்? ஊழல் நிறுத்தப்படுமா? பொருளாதார குற்றங்களுக்கு எதிராக அரசாங்கம் எவ்வாறான நடவடிக்கைகளை எடுக்கும் என்பது குறித்து ஆராய வேண்டும் என மாற்று கொள்கைகளுக்கான கேந்திர நிலையத்தின்





சட்டத்தரணி பவாணி பொன்சேகா தெரிவிக்கின்றார்.

"2023ம் ஆண்டு இலங்கைக்கு ஒவ்வொரு விதத்தில் மனித உரிமைகள் தொடர்பில் பிரச்னைகள் வர முடியும். தேர்தல் புதிய பிரச்னையாக காணப்படுகின்றது. தேர்தலை நடத்துவதா? மக்களுக்கு வாக்களிக்க முடியுமாக இருக்குமா? என பார்க்க வேண்டும். தேர்தலை நடத்துவது அவசியமானது"

"தேர்தல் ஒன்று நடத்தப்பட வேண்டும். அந்த பிரச்னையும் வருகின்றது. பொருளாதார குற்றங்கள் மாத்திரம் அல்ல, தேர்தல் பக்கத்திலும் பிரச்னை உள்ளது. இலங்கையில் இதற்கு முன்னர் தேர்தலை நடத்தாது பிற்போட்ட சந்தர்ப்பங்களில், நீதிமன்றத்தை நாடிய போது, தேர்தலை நடத்துவது அவசியமானது என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. தேர்தல் நடத்தப்படாத பட்சத்தில், மனித உரிமை மீறப்படும் என கூறப்பட்டது. அனைத்து பிரஜைகளுக்கும் வாக்குரிமை உள்ளது. தேர்தலை பிற்போடும் போது, பிரச்னை ஏற்படக்கூடும். 2023ம் ஆண்டு பொருளாதார ரீதியிலும், தேர்தல் பக்கத்திலும் பிரச்னைகள் வரக்கூடும்" என பவாணி பொன்சேகா தெரிவிக்கின்றார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பான யோசனை 2023ம் ஆண்டு முன்வைக்கப்படாது என அவர் கூறுகின்றார்.

எனினும், இலங்கையின் மனித உரிமை நிலைமை மற்றும் பொருளாதார குற்றங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையொன்று முன்வைக்கப்படும் என அவர் குறிப்பிடுகின்றார்.

"யோசனையொன்று முன்வைக்கப்படுமாயின், அது 2024ம் ஆண்டே முன்வைக்கப்படும். எனினும், பொரு ளாதார குற்றங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்படும். 2023ம் ஆண்டு இலங்கையின் பொருளாதாரம் மற்றும் மனித உரிமை தொடர்பில் அறிக்கையிடலாம்."

"ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி ஆகியன எமக்கு உதவிகளை வழங்கும் போது, மனித உரிமை நிலைமை குறித்து அவதானம் செலுத்தும். பொருளாதார குற்றங்கள் தொடர்பிலும் எதிர்காலத்தில் பிரச்னை வரும். என அவர் தெளிவு படுத்தினார்.

"இந்த சவால்களுக்கு 2023ம் ஆண்டு அரசாங்கம் என்ன செய்யப் போகின்றது என்பது குறித்து நாம் பார்க்க வேண்டும். பொருளாதாரம், பொருளாதார குற்றங்கள், மனித உரிமை, சட்டவாதிக்கம் ஆகியவற்றில் எவ்வாறு ஊழல் தவிர்க்கப்படும் என்பது குறித்து பார்க்க வேண்டும்"

"2022ம் ஆண்டு எமக்கு பாரிய பிரச்னைகள் காணப்பட்டன. 2023ம் ஆண்டும் இலங்கைக்கு பாரிய பிரச்னைகள் காணப்படுகின்றன. இந்த பிரச்னைகளுக்கு அரசாங்கம் எவ்வாறு முகம் கொடுக்கப் போகின்றது என்பதே பிரச்னையாக உள்ளது."

"2022ம் ஆண்டு நாம் அவசரகால சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டம் ஆகியவற்றை அதிகள வில் பயன்படுத்தியதை நாம் அவதானித்தோம். எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தினால், ராணுவத்தை பயன்படுத்துவதாக ஜனாதிபதி கூறியுள்ளார். இலங்கையில் பல பிரச்னைகள் காணப்படுகின்றன. பொருளாதார பிரச்னைகள் காணப்படுகின்றன. மக்களுக்கு உணவு இல்லாத பிரச்னைகள் அதிகரிக்கும் போது, எதிர்ப்புக் களும் அதிகரிக்கக்கூடும். அரசாங்கம் ஆர்ப்பாட்டங் களை நடத்த இடமளிக்குமா?. எவ்வாறு செய்யப் போகின்றார்கள் என்பதை பார்க்க வேண்டும். ராணு வத்தை பயன்படுத்தினால், அது பாரிய பிரச்னை. 2022ஆம் ஆண்டு அரசாங்கம் முன்னெடுத்த விடயங்களை 2023ஆம் ஆண்டும் அவ்வாறே முன்னெ டுக்கும். ஜனாதிபதியே இதனை கூறியுள்ளார்" என அவர் குறிப்பிடுகின்றார்.

**போசாக்கு சவால்கள்**

இலங்கை 1948ம் ஆண்டு சுதந்திரம் பெற்றுக் கொண்டதன் பின்னர், பாரிய பொருளாதார நெருக் கடியை தற்போது சந்தித்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவிக்கின்றது.

இலங்கையிலுள்ள 60 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் - மக்கள் தொகையில் 30 வீதத்திற்கு அண்மித் தோர் உணவு பாதுகாப்பற்ற நிலைமையை எதிர்நோக்கியுள்ளதுடன், அவர்கள் மனிதாபிமான உதவிகளை எதிர்பார்த்துள்ளதாக உலக உணவுத் திட்டத்தின் தரவுகள் தெரிவிக்கின்றன.



உள்நாட்டு விவசாய உற்பத்தி குறைவடைந்துள்ளமை, அந்நிய செலாவணி இருப்பு குறைவடைந்துள்ளமை, உள்நாட்டு பணப் பெறுமதி மதிப்பிழந்துள்ளமை ஆகிய காரணிகள் உணவு தட்டுப்பாடு மற்றும் வாழ்க்கை செலவு அதிகரிப்பிற்கான காரணமாக அமைந்துள்ளது. இதனால், மக்களுக்கு ஆரோக்கியமான மற்றும் விலை குறைந்த உணவு வகைகள் கிடைப்பது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியானது, குடும்பங்களை வறுமைக்கு தள்ளியுள்ளது. தொற்று நோய் காரணமாக இந்த நாட்டிலுள்ள அரை மில்லியன் மக்கள் வறுமை கோட்டிற்கு கீழ் தள்ளப்பட்டுள்ளதாக உலக வங்கி மதிப்பீடு செய்துள்ளது.

86 வீதமான குடும்பங்கள் விலை குறைவான மற்றும் போசாக்கு இல்லாத உணவு வகைகளை கொள்வனவு செய்வதாக உலக உணவு திட்டத்தின் தரவுகள் குறிப்பிடுகின்றன. சில சந்தர்ப்பங்களில் உணவு வேளைகளை முழுமையாக தவிர்க்கும் குடும்பங்களும் இருக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடி மற்றும் தொற்று நோய் பரவலுக்கு முன்னர், இலங்கை முழுவதும் போசாக்கின்மை விகிதாசாரம் உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டது. இந்த நிலையில், தற்போது காணப்படுகின்ற பொருளாதார நிலைமைக்கு மத்தியில், அது மேலும் வலுவடைந்துள்ளது.

அதனால், 2023ம் ஆண்டு மக்களுக்கு போசாக்கான உணவு வழங்குதல் மற்றும் அனைவருக்கும் உணவு விநியோகிப்பது தொடர்பில் அரசாங்கத்திற்கு பாரிய பொறுப்பு காணப்படுகின்றது.

**காலநிலை சவால்கள்**

கடந்த சில காலமாக ஏற்பட்ட சீரற்ற காலநிலை மாற்றங்களினால், இந்த நாட்டு மக்கள் பாரிய அனர்த்தங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

வறட்சி, வெள்ளம், மண்சரிவு ஆகிய இயற்கை அனர்த்தங்களினால், உணவு மற்றும் போசாக்கு பாதுகாப்பற்ற நிலைமை அதிகரித்தது. அதனால், 2023ம் ஆண்டு காலநிலை சவால்களை வெற்றிகரமான எதிர்கொள்வதற்கான தேவை இலங்கைக்கு



காணப்படுகின்றது.

லா நின்யா (மழை பெய்யாத காலங்களில் மழை பெய்யும் நிலைமை) காலநிலை நிலைமை தற்போது பலவீனமடைந்துள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் அனுஷா வர்ணசூரிய தெரிவித்துள்ளார். 2020ம் ஆண்டு முதல் மூன்று ஆண்டுகளாக இந்த நிலைமை தொடர்கின்றது எனவும் அவர் கூறுகின்றார்.

"லா நின்யா பாலவீனமடைந்துள்ள மையினால், நாட்டில் காலநிலை அழுத்தங்கள் காணப்படுகின்றன. அது இருக்கும் பட்சத்தில், ஜனவரி, பெப்ரவரி மழை கிடைக்கும். அதனால், மழை வீழ்ச்சி குறைவடையும் சாத்தியம் உள்ளது. சாதாரண மழையை எதிர்பார்க்க முடியும்" என அவர் குறிப்பிடுகின்றார்.

பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களில் கடுமையாக மழையை எதிர்பார்க்க முடியாது. எனினும், மே மாதத்தில் மழை வீழ்ச்சியை எதிர்பார்க்க முடியும் என அவர் கூறுகின்றார். நாட்டில் தற்போது நீர்த்தேக்கங்களில் 55 முதல் 60 வீதம் வரையான நீர் மட்டமே காணப்படுகின்றது. (பிபிசி)

# அ.தி.மு.க. - பா.ம.க. மோதல் ஏன்? கூட்டணி தொடருமா?

பாட்டாளி மக்கள் கட்சியின் பொதுக் குழுவில் அக்கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் அதிமுக குறித்துப் பேசியதற்கு அதிமுகவின் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் பதிலளிக்க, விவகாரம் இரு கட்சிகளுக்கு இடையிலான மோதலாக உருவெடுத்திருக்கிறது. நாடாளுமன்ற தேர்தல் கூட்டணி கணக்குகளில் இது பாதிப்பை ஏற்படுத்துமா?

புத்தாண்டு தினத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் பொதுக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பேசிய அக்கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ், “அதிமுக நான்காக உடைந்திருக்கிறது. தி.மு.க மீது மக்களுக்கு கடுமையான விமர்சனங்கள் இருக்கின்றன. அடுத்து நாம்தான் இருக்கோம். மற்றவர்கள் எல்லாம் வெறும் சத்தம்தான்” என்று பேசினார்.



அவருடைய இந்தப் பேச்சுத்தான் அதிமுகவை கொந்தளிக்க வைத்துள்ளது. இந்த விவகாரம் குறித்து திங்கட்கிழமையன்று செய்தியாளர்களிடம் பேசிய அதிமுகவின் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார், “ஏறி வந்த ஏணியை மறக்கலாமா? ஜெயலலிதா இல்லையென்றால் பாமகவே வெளியில் தெரிந்திருக்காது,” என்று கூறியுள்ளார்.

மேலும், “ஜெயலலிதா கூட்டணி வைத்ததால்தான் பா.ம.கவுக்கு அங்கீகாரமே கிடைத்தது. அதற்கு முன்பு அந்தக் கட்சிக்கு அங்கீகாரமே கிடையாது. 1991ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் பாமகவுக்கு ஒரு இடம் தான் கிடைத்தது. அதற்குப் பிறகு நடந்த நாடாளுமன்ற தேர்தலில் ஒரு இடம் கூட கிடைக்கவில்லை.

1998ல் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அதிமுக - பாமகவுக்கு 5 இடங்களை வழங்கியது. அதில் 4ல் வெற்றிபெற்றார்கள். அப்போதுதான் தேர்தல் ஆணையத்தின் அங்கீகாரம் பாமகவுக்குக் கிடைத்தது. இப்படி



நன்றி மறந்து பேசினால், தமிழக மக்கள், அதிமுகவினர் மட்டுமல்ல, அவர்களுடைய கட்சிக்காரர்களே மதிக்க மாட்டார்கள்.

2001 சட்டமன்றத் தேர்தலில் பா.ம.கவுக்கு 27 இடங் களை ஜெயலலிதா வழங்கினார். அதில் 20 இடங்களில் வெற்றிபெற்றனர். இப்படி அதிமுக தயவால்தான் சட்டமன்றத்தில் நுழைந்தது. நாடாளுமன்றத்தில் நுழைந்தது. மத்திய மந்திரி பதவிகளைப் பெற்றது. அதிமுகவின் தயவையெல்லாம் பெற்றுவிட்டு, இப்போது அதிமுக நான்காக உடைந்துவிட்டதாகச் சொன்னால் சரியா?

அன்புமணி வகிக்கும் எம்பி பதவி யார் கொடுத்தது? அதிமுகதான் அவரை எம்.பியாக அடையாளம் காட்டியது. அதையெல்லாம் மறந்துவிட்டுப் பேசலாமா? இனியும் எங்களைச் சீண்டினால், தக்க பதிலடி தருவோம்” என்கிறார் ஜெயக்குமார்.

அன்புமணியின் கருத்துக்கு அதிமுக இவ்வளவு ஆவேசமாக பதிலளித்தது ஆச்சரியத்தை ஏற்படுத்தியதென்றால், அதைவிட ஆச்சரியம் பாமகவின் பதிலடி. உடனடியாக செய்தியாளர்களைச் சந்தித்த அக்கட்சியின் செய்தித் தொடர்பாளரும் வழக்கறிஞருமான பாலு, அதிமுகவிற்கு பாமக உதவிய தருணங்களைச் சுட்டிக்காட்டினார்.

“அதிமுக பிளவுபட்டிருக்கிறதென்பது சாதாரண குழந்தைக்குக்கூட தெரிந்த விஷயம். இதனை நாங்கள் எங்கள் கட்சிக் கூட்டத்தில் பரிமாறிக்கொள்கிறோம்.

இதைப் பற்றி ஜெயக்குமார் பேசும்போது 1998ல் பாமகவுக்கு நாங்கள்தான் சீட் கொடுத்தோம், அன்புமணி ராமதாஸ் நாடாளுமன்ற உறுப்பினராவதற்கு நாங்கள்தான் காரணம் என்கிறார். அன்புமணி ராமதாஸ் நாடாளுமன்ற உறுப்பினராக இவர் எந்த வகையில் காரணம்? முதலில், இவர் யார்? உடன்படிக்கையின்படி அந்த இடம் பாமகவுக்கு வழங்கப்பட்டது. அந்த இடத்தை யாருக்கு வழங்குவதென்பதை கட்சித் தலைமை முடிவுசெய்து, அன்புமணி ராமதாஸுக்கு வழங்கியது.

எங்களால்தான் நாடாளுமன்ற உறுப்பினர்களானார்கள், சட்டமன்ற உறுப்பினர்களானார்கள் என்று சொல்வதை அவர்கள் வழக்கமாக வைத்திருக்கிறார்கள்.

ஆனால், 1996ஐ அவர்கள் திரும்பிப் பார்க்க வேண்டும். ஆட்சியிலிருந்த அதிமுக பெற்ற இடங்கள் நான்கு. தனித்து நின்ற பாமக பெற்ற இடங்களும் நான்கு.

1998ல் அ.தி.மு.க. பலவீனப்பட்டிருந்தபோது, தேனாம்பேட்டையில் இருக்கக்கூடிய எங்கள் கட்சி அலுவலகத்திற்கு வந்து ஜெயலலிதா கூட்டணி அமைத்ததால்தான் நாடாளுமன்ற தேர்தலில் அவர்கள் வெற்றி பெற்றார்கள். எப்போதெல்லாம் அதிமுக பலவீனப்பட்டு, உயிர் போயிருக்கக்கூடிய நேரமாக இருந்திருக்கிறதோ, அப்போதெல்லாம் உயிர் வழங்கக்கூடியவர்களாக பாமகவினர் விளங்கியிருக்கிறோம். 1998ல் அந்த முடிவை எடுக்கவில்லையென்றால், அதிமுக பெரும் சரிவை சந்தித்திருக்கும். 2001ல் கூட்டணி வைக்க ராமதாசுக்காக ஜெயலலிதா வழிமேல் விழிவைத்து காத்திருந்தார்.

“எங்களால்தான் அதிமுக ஆட்சிக்கு வந்தது, எங்களால்தான் எடப்பாடி பழனிசாமி முதல்வராக இருந்தார், ஜெயக்குமார் இரண்டு ஆண்டுகள் அமைச்சராக இருந்தார்“ என நாங்கள் ஒருபோதும் சொல்வதில்லை. ஆகவே, ஜெயக்குமார் பாமகவை விமர்சிக்கும்போது, கடந்த காலத்தில் பாமகவின் பங்களிப்பு என்ன என்பதைப் புரிந்துகொண்டு பேச வேண்டும்.

ஒரு கூட்டணியில் இருக்கும் இருவரும்தான் பயனடைகிறார்கள். அ.தி.மு.கவினர் தங்கள் கட்சிக்குள் குழப்பம் இல்லையென்றால் ஏன் நீதிமன்றம் செல்கிறார்கள்? இதை நினைவூட்ட வேண்டிய நிலையை ஏற்படுத்தியது ஜெயக்குமார்தான்” என கடுமையாக ஜெயக்குமாரை விமர்சித்தார் வழக்கறிஞர் கே. பாலு.

கல்வி tv CHANNEL-1

**05.01.2023**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

கல்வி tv CHANNEL - 2

**05.01.2023**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |




# கிழக்கு சுகாதார அமைச்சில் தகவல் தொழில்நுட்பப் பிரிவு

திருமலை, ஜன. 05

இன்றைய தகவல் தொழில்நுட்ப யுகத்திற்கேற்ப நாம் அனைத்து விடயங்களையும் மேற்கொள்ளவும், அதே போன்று தகவல்களையும் பாதுகாத்துக்கொள்ள வாய்ப்புகள் அதிகமுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே. முரளிதன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சில் தகவல் தொழில்நுட்பப் பிரிவு திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று முன் தினம் குறித்த அமைச்சின் இடம் பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

கணினி மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அனைத்து விடயங்களையும் திட்டமிடல், ஒருங்கிணைத்தல் மற்றும் செயற்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்வதன் மூலம் எமது வேலைகளை மிக இலகுவாக செய்து முடிக்கலாம் - என்றார்.

இந்த நிகழ்வில், அமைச்சின் கணக்காளர் எஸ்.சற்குணேஸ்வரன், திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.நெடுஞ்செழியன், நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ஸ்ரீவாணி, பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் திருமதி எஸ்.விஜயகுமார் மற்றும் அமைச்சின் உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (அ)

# இந்தியாவின் துணையோடு அரசியல் தீர்வுக்கான நகர்வு

## ஜனநாயகப் போராளிகள் கட்சி வலியுறுத்து

மட்டக்களப்பு, ஜன. 05

எமது மக்களின் விடிவுக்கான வழி, இந்தியாவின் கைகளில் தங்கியிருக்கின்றது. போராளிகளாகிய எங்களை, இந்தியா தற்போது அங்கீகரிக்கும் நடைமுறைகளைக் கையாண்டு வருகின்றது. எனவே, இந்தியாவின் துணையோடு, தமிழ் மக்களுக்கான அரசியல் நகர்வை, நாங்கள் முன்னெடுக்கத் தயாராக இருக்கின்றோம் என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உபதலைவர் என். நகுலேஸ் தெரிவித்தார்.

வாகரைப் பிரதேசத்தில், கட்சி ஆதரவாளர்களுடனான சந்திப்பில் கலந்துரையாடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஈழத் தமிழ் மக்களின் நியாயமான அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யவென ஆயுதமேந்திப் போராடிய போராளிகள், ஆயுதம் மௌனிக்கப்பட்டதன் பின்னர்



போராட்ட வடிவத்தை மாற்றி, ஜனநாயக நீரோட்டத்தில், அரசியல் ரீதியில் தமிழ் மக்களுக்கான நம்பகமான நடைமுறைகளை முன்னெடுக்கப் புறப்பட்டுள்ளோம்.

போராட்ட காலத்தில் தமிழ் மக்களின் ஆதரவு போராளிகளுக்கு எவ்வாறு இருந்ததோ, அதே விதத்தில் தற்போதைய அரசியல் போராட்டத்திலும் எமக்கு மக்களின் ஆதரவுத் தளம் அமையவேண்டும்.

இந்த நாட்டின் அரசாங்கங்கள், தமிழர்களின் உரிமையை வழங்க மறுத்ததன் காரணமாகவே போராட்ட வடிவங்கள் உக்கிரமடைந்தன. ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டாலும் தமிழ் மக்கள் மனதில் உள்ள உரிமைக் கோரிக்கையும் போராட்ட குணமும் இன்னும் குறையவில்லை - என்றார். (அ)

# உத்தரவாத விலையில் நெல்லை கொள்வனவு செய்யவேண்டும்!

## கிண்ணியா விவசாய சம்மேளனம் கோரிக்கை

மட்டக்களப்பு, ஜன. 05

பெரும்போகத்தில் அறுவடை செய்யப்பட இருக்கின்ற நெல்லை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என கிண்ணியா விவசாய சம்மேளனங்களின் ஊடகப் பேச்சாளர் எம்.எம் மஹ்தி கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உர இறக்குமதி நிறுத்தப்பட்டமையாலும் நெற் செய்கைக்கான மூலப் பொருட்களின் விலை உயர்வாலும் பெரிதும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் வருமான இழப்பு, கடன் போன்றவற்றால் தத்தளிக்கின்றனர்.

எனவே, இன்னும் சில நாள்களில் ஆரம்பிக்கப்பட இருக்கின்ற பெரும்போக அறுவடை நெல்லை, அரசாங்கம் உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் விவசாயிகள் சார்பாக அரசிடம் கோருகிறோம்-என்றார். (அ)



# போசாக்கு குன்றிய குழந்தைகளுக்கு 250 சத்துமாப் பொதிகள் விநியோகம்

அம்பாறை, ஜன. 05

சமகால பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டு போசாக்கு குன்றிய குழந்தைகளுக்கு மட்டக்களப்பு றோட்டரிக்கழகம் 250 சத்துமாப்பொதிகளை நேற்று முன் தினம் வழங்கப்பட்டன.

மட்டக்களப்பு றோட்டரி கழகம், செங்கலடி பிரதேச சுகாதார சேவைகள் திணைக்களத்தோடு இணைந்து அப்பிரதேசத்திலுள்ள போசாக்கு குன்றிய குழந்தைகளுக்கான 250 சத்துமா பொதிகளை வழங்கியது.

இந் நிகழ்வானது மட்டக்களப்பு றோட்டரி கழக தலைவர் றோட்டரியன் புஞ்சியப்பு ரமணதாச தலைமையில் நடைபெற்றது. (அ)

# பாண்டிருப்பில் புத்தாண்டு மனமகிழ் விழா!

அம்பாறை, ஜன. 05

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் புத்தாண்டு மனமகிழ் விழாவானது கலை கலாசார பாரம்பரிய விளையாட்டு போட்டி நிகழ்வாக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி. ஜே. அதிசயராஜ் பிரதமர் விருந்தினராக கலந்து கொண்டார்.

பாண்டிருப்பு இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்ற இந்த வைபவம் பிரதேச செயலக திட்டமிடல் பிரிவு உத்தியோகத்தரர்களால் நடத்தப்பட்டது.

புத்தாண்டை வரவேற்கும் முகமாக பாரம்பரிய



கலாச்சார விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெற்றன. தமிழ் முஸ்லிம் உத்தியோகத்தர்கள் பரஸ்பரம் புரிந்துணர்வுடன் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# புதிய அதிபர் கடமையேற்பு

அம்பாறை, ஜன. 05

காத்தான்குடி மத்திய கல்லூரி அதிபராக கடமையாற்றிய எம்.எசி.எம்.ஏ சத்தாரின் சேவையை பாராட்டி கௌரவிக்கும் வைபவமும், புதிய அதிபர் எம்.ஏ நிஹால் பதவியேற்கும் நிகழ்வும் கல்லூரி மண்டபத்தில், கல்லூரியின் பழைய மாணவர் அமைப்பு மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்பவற்றின் ஏற்பாட்டில் நடைபெற்றன.

நிகழ்வில், காத்தான்குடி நகர சபை தவிசாளர் எஸ்.எச் அஸ்பர், பழைய மாணவர் அமைப்பின் பிரதி தலைவர் பொறியியலாளர் பலுல் ஹக், செயலாளர் றிபாய் கலீல் உட்பட பிரமுகர்கள பலரும் கலந்து கொண்டனர். (அ)



# மலவாயிலில் ஹெரோயின் வசமாக சிக்கினார் ஒருவர்

திருமலை, ஜன. 05

கொழும்பிலிருந்து திருகோணமலைக்கு 10 கிராம் ஹெரோயின் போதைப் பொருளைக் கொண்டு சென்ற ஒருவரை கந்தளாயில் வைத்து நேற்று கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

10 கிராம் ஹேறொயின் போதைப்பொருளை 100 பைக்கெற்றுகளில் இட்டு மலவாயிலில் மறைத்து கொண்டு சென்ற போதே கந்தளாய் இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய சந்தேகநபரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கந்தளாய் இராணுவ புலனாய்வுப் பிரிவினர் சந்தேகநபரை கைது செய்து கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

கந்தளாய் பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்ட அதிகூடிய ஹேறொயின் போதைப் பொருள் தொகை இதுவாகும் என பொலிஸார் தெரிவித்தனர். (அ)



## ஏவுகணை தாக்குதலில் 89 சிப்பாய்கள் மரணம்!

மொஸ்கோ, ஜன. 05

புத்தாண்டு தினத்தில் நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் குறைந்தது 89 படைச் சிப்பாய்கள் கொல்லப்பட்டுள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

படைச் சிப்பாய்கள் தொலைபேசிகளைப் பயன்படுத்தியமையே இதற்கு காரணமென ரஷ்யா சுட்டிக் காட்டியுள்ளது.

தமது படை சிப்பாய்கள் தடை செய்யப்பட்ட தொலைபேசிகளைப் பயன்படுத்தியமையால், அவர்களது இடங்களை அடையாளங்காண உக்ரைனுக்கு இலகுவாக இருந்ததாக ரஷ்ய இராணுவம் தெரிவித்துள்ளது.

ரஷ்யாவால் கையகப்படுத்தப்பட்ட டொனெட்ஸ்க் பிராந்தியத்தின் மக்கிவ்கா நகரிலுள்ள கல்லூரி ஒன்றில் கடந்த முதலாம் திகதி இந்த தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

இந்தத் தாக்குதலில் பொதுமக்கள் கொல்லப்பட்டனரா என்பது இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# சீனாவில் கழிவு நீரினால் பரவுகிறது கொரோனா!

## பெரும் அச்சத்தில் மக்கள்

பீஜிங், ஜன. 05

சீனாவில் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு கொரோனா பாதிப்பு உச்சம் தொட்டுள்ளது. இதற்கிடையே வைரஸ் பாதிப்பைக் கண்காணித்து, அதைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் சீனா இறங்கியுள்ளது.

சீனாவில் உள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் கொரோனா நோயாளிகள் நிரம்பி வழிகின்றனர். அதிலும் தீவிர பாதிப்பு அதிகம் ஏற்படத் தொடங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

சில வாரங்களில் மாத்திரம் பல கோடி பேருக்கு அங்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

பீஜிங், ஷங்காய் போன்ற பெருநகரங்களில் வைரஸ் பாதிப்பு ஏற்கனவே உச்சம் தொட்டுள்ள நிலையில், இப்போது அடுத்தகட்டமாக மற்ற நகரங்களிலும் வைரஸ் பாதிப்பு உச்சம் தொட்டு வருகிறது.

சீன தடுப்பூசிகளால் தீவிர பாதிப்பைக் கட்டுப்படுத்த முடியாமல் போனதும் வைரஸ் பரவல் இந்தளவுக்கு வேகமாகப் பரவ ஒரு காரணமாக அமைந்துவிட்டது.

இதற்கிடையே கொரோனா பரவலைக் கண்காணிக்கக் கழிவு நீர் அமைப்புகளை கண்காணிக்கும் நடவடிக்கையில் சீனா இறங்கியுள்ளது.

கொரோனா பரவ தொடங்கிய சமயத்தில் சில



நாடுகளில் இந்த முறை பின்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பீஜிங் மற்றும் ஷென்சென் நகரங்களில் சோதனை முறையில் கழிவுநீர் கண்காணிப்பு முறையைச் சீனா ஆரம்பித்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அதாவது கழிவு நீர் மூலம் கொரோனா பரவுகிறதா என்பதைக் கண்காணிக்கவே சீனா இந்த நடைமுறையைக் கையில் எடுத்துள்ளது.

முதற்கட்டமாகச் சோதனை அடிப்படையில் பெரு நகரங்களில் மட்டும் இந்த நடவடிக்கை தொடங்கப்பட உள்ளது. (அ)

## தென்கொரியாவுடன் அமெரிக்கா கூட்டு அணு ஆயுதப் பயிற்சியா?

### மறுக்கிறார் ஜோ பைடன்

நியூயோர்க், ஜன. 05

தென் கொரியாவுடன் கூட்டு அணு ஆயுதப் பயிற்சிகள் பற்றி அமெரிக்கா விவாதிக்கவில்லை என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.



தென் கொரியாவுடன் கூட்டு அணு ஆயுதப் பயிற்சி பற்றி விவாதிக்கிறீர்களா? என வெள்ளை மாளிகையில் வைத்து ஊடகவியலாளர் கேள்வியெழுப்பிய போதே அவர் இதனை கூறினார்.

முன்னதாக, அமெரிக்காவும் தென் கொரியாவும் அமெரிக்க அணுசக்தி சொத்துக்கள் தொடர்பான பயிற்சிகள் குறித்து பேச்சு நடத்தி வருவதாக தென் கொரிய ஜனாதிபதி யூன் சுக்-யோல் தெரிவித்திருந்தார்.

சோசுன் இல்போ பத்திரிக்கையில் வெளியிடப்பட்ட ஒரு நேர்காணலில், இந்த விடயத்தை அவர் குறிப்பிட்டிருந்தார்.

கடந்த ஆண்டு முன்னோடியில்லாத எண்ணிக்கையிலான பாலிஸ்டிக் ஏவுகணைகளை வட கொரியா சோதனை செய்து கொரிய தீபகற்பத்தில் பதற்றத்தை அதிகரித்துள்ள நிலையில், இந்த செய்தி வந்துள்ளது. (அ)

## சிங்கப்பூரின் பொருளாதாரம் எதிர்பார்த்ததை விட வளர்ச்சி!

சிங்கப்பூர் சிற்றி, ஜன. 05

சிங்கப்பூரின் பொருளாதாரம் கடந்த 2022ஆம் ஆண்டு எதிர்பார்த்ததை விட அதிகமாக வளர்ச்சியைக் கண்டுள்ளது.

தென்கிழக்கு ஆசிய நாடான சிங்கப்பூரின் பொருளாதாரம் கடந்த ஆண்டு 3.8 சதவீதம் வளர்ச்சியடைந்ததாக வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சின் ஆரம்ப புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

எவ்வாறாயினும், ஆண்டின் இறுதி மூன்று மாதங்களில் முக்கிய உற்பத்தித் துறையில் வளர்ச்சி 3.0 சதவீதம் சுருங்கியது.

நான்காவது காலாண்டில் வளர்ச்சி 2.2 சதவீதமாக இருந்தது, இது ஜூலை - செப்ரெம்பரில் 4.2 சதவீதமாக இருந்தது.

அதிகரித்து வரும் பணவீக்கம் மற்றும் வட்டி வீதங்களில் கூர்மையான அதிகரிப்பு ஆகியவற்றால் ஏற்படும் மென்மையான உலகளாவிய தேவையால் கணினி சிப்கள் மற்றும் பிற தயாரிப்புகளுக்கான ஏற்றுமதிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

2023 உலகப் பொருளாதாரத்திற்கு கடினமான ஆண்டாக இருக்கும் எனவும் மூன்றில் ஒரு பங்கு பொருளாதாரங்கள் மந்தநிலையில் இருக்கும் எனவும் சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக இயக்குநர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூர் பிரதமர் லீ சியென் லூங் தனது புத்தாண்டு செய்தியில் இந்த ஆண்டு வளர்ச்சி 0.5 முதல் 2.5 சதவீதம் வரை குறையும் என்று எச்சரித்தார். (அ)



# நான் 'ப்ளேபோய்' தான்!

## இம்ரான் கான் வெளியிட்ட கருத்தால் பெரும் பரபரப்பு

இஸ்லாமாபாத், ஜன. 05

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் சில பெண்களுடன் பேசும் சில ஓடியோக்கள் வெளியாகிப் பரபரப்பைக் கிளப்பியிருந்தன.

இது குறித்து அவரே இப்போது விளக்கமளித்துள்ளார். லாகூரில் உள்ள தனது இல்லத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர், "நான் கடந்த ஒகஸ்ட் 2022ஆம் ஆண்டு ஓய்வுபெற்ற இராணுவ தளபதி கமர் ஜாவேத் பஜ்வாவை சந்தித்தேன். அப்போது எனது கட்சியை சேர்ந்த சிலரின் ஓடியோக்கள் மற்றும் வீடியோக்கள் தன்னிடம் இருப்பதாக அவர் கூறினார். மேலும், என்னை ஒரு 'ப்ளேபோய்' என்றும் அவர் கூறினார். நான் அவரிடம் சொன்னேன், ஆம், நான்



ஒரு பிளேபோய் தான். ஆனால், அது கடந்த காலத்தில். அப்போது நான் ரொம்ப நல்லவனாக ஏஞ்சலை போல இருந்துள்ளேன் என்று நான் ஒருபோதும் கூறவில்லை. நான் பதவியில் இருந்து நீக்கப்பட பஜ்வாவும் ஒரு முக்கிய காரணம். அவர் திட்டமிட்டு என்னை ஏமாற்றிவிட்டார்.

அவர் டபிள் கேம் ஆடிவிட்டார். என்னிடம் அவர் நல்லவன் போலவே நடித்தார். ஆனால், மறுபுறம் ஷெபாஸ் ஷெரீப்பை பிரதமராக்கும் நடவடிக்கையில் இறங்கினார். அவர் கவனமாக டபிள் கேம் விளையாடுகிறார் என்பதை நான் அறிந்து கொண்டேன். பஜ்வா என் முதுகில் குத்தினார். இப்போது பாகிஸ்தானில் தேர்தல் நடத்தப்பட்டால் நான் வென்று பிரதமராவது உறுதி. இதை அனைவருக்கும் தெரியும். இதைத் தடுக்கவே இராணுவத்தில் பாஜ்வா ஒரு செயலை செய்துள்ளார். அவர்கள் இன்னுமே கூட நான் பிரதமராகக் கூடாது என்பதில் தீவிரமாக இயங்கி வருகிறார்கள்.

நான் எனது பதவிக் காலத்தில் பல்வேறு முடிவுகளை எடுத்துள்ளேன். ஆனால், ஓய்வு பெற இருந்த ஜெனரல் பாஜ்வாவுக்கு பதவி நீடிப்பு வழங்கியதுதான் நான் செய்த மிகப் பெரிய தவறு. பதவி நீடிப்புக்குப் பிறகு அவர் தனது உண்மை நிறத்தைக் காட்டத் தொடங்கினார். அரசுக்கு எதிராகச் சதி செய்த அவர், என்னையும் பிரதமர் பதவியில் இருந்து நீக்கப் பல நடவடிக்கைகளை எடுத்தார். நான் அவருக்குப் பதவி நீடிப்பு கொடுத்தது தான் எனது வாழ்க்கையில் செய்த மிகப் பெரிய தவறு-என்றார். (அ)



## தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட் முதல்நாளில் அவுஸ்திரேலியா 147/2

சிட்னி, ஜன. 05

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியின் முதல்நாள் ஆட்டம் நிறைவில் அவுஸ்திரேலியா 147 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களை இழந்துள்ளது.

அவுஸ்திரேலியா சென்றுள்ள தென்னாபிரிக்க அணி டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. முதல் இரு போட்டிகளையும் வென்று அவுஸ்திரேலியா வெற்றி பெற்றுள்ளது.

இந்நிலையில், நேற்று ஆரம்பமான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி உஸ்மான் கவாஜா, டேவிட் வோர்ணர் இணை தொடக்கம் கொடுத்தனர். கடந்த போட்டியில் இரட்டைச் சதம் அடித்த வோர்ணர் 10 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

இதையடுத்து களமிறங்கினார் மார்னஸ் லபுசாக்னே. இருவரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

இந்நிலையில், மாலை தேநீர் இடைவேளையின் பின்னர் மழை, போதிய வெளிச்ச மின்மை காரணமாக ஆட்டம் அடிக்கடி பாதிக்கப்பட்டது.

தொடர்ந்த ஆட்டத்தில், லபுஷாக்னே 79 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இந்த நிலையில் மழையும் தொடரவே ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

அப்போது, அவுஸ்திரேலியா 147 ஓட்டங்களை எடுத்திருந்தது. கவாஜா ஆட்டமிழக்காமல் 54 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

தென்னாபிரிக்காவின் பந்துவீச்சில் அன்ரிச் நோர்ட்ஜே 2 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

இன்று போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டமாகும். (ஐ)

# இலங்கையுடனான ரி -20; இந்தியா 'த்ரில்' வெற்றி!



மும்பை, ஜன. 05

இலங்கை அணிக்கு எதிரான முதல் இருபது -20 கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 2 ஓட்டங்களால் த்ரில் வெற்றி பெற்றுள்ளது.

இந்தியா சென்றுள்ள இலங்கை அணி இருபது - 20, ஒருநாள் தொடர்களில் விளையாடுகிறது. தற்போது இரு அணிகளும் இருபது -20 தொடரில் பலப்பரீட்சை செய்து வருகின்றன. இந்தத் தொடரின் முதல் போட்டி மும்பை நகரின் வான்கடே மைதானத்தில் நேற்று நடை பெற்றது.

இதில், 163 ஓட்டங்கள் இலக்கை துரத்திய இலங்கை அணி இரண்டாவது ஓவரில் முதல் விக்கெட்டை இழந்தது. அறிமுக வீரராக களமிறங்கிய இந்திய பந்துவீச்சாளர் ஷிவம் மாவி வீசிய முதல் ஓவரில் பந்தை வெவ்வேறு அளவில் வீசி எதிரணி துடுப்பாட்ட வீரர் நிசங்கவை குழப்பி, கடைசி பந்தில் அவரை போல்ட் செய்தார். தொடர்ந்து அவர் வீசிய இரண்டாவது ஓவரில் தனஞ்சய டி சில்வா விக்கெட்டையும் கைப்பற்றினார்.

அசலங்கவை உம்ரான் மலிக் வெளியேற்ற சிறிதுநேரம் நிலைத்து ஆடிய குஷல் மெண்டிஸை 28 ஓட்டங்களுக்கு ஹர்ஷல் பட்டேல் ஆட்டமிழக்க செய்தார். அதன்பின் ராஜபக்ஷ, ஹஸரங்கா என சீரான இடைவெளியில் விக்கெட்கள் வீழ்ந்தன. ஆனாலும் அணித் தலைவர் தசுன் ஷானக அதிரடியாக விளையாடினார். இந்திய பந்துவீச்சாளர்களுக்கு போக்குக் காட்டிய அவர், 26 பந்துகளில் 3 சிக்ஸர்களுடன் 45 ஓட்டங்களை சேர்த்த, அவரை உம்ரான் மலிக் வீழ்த்தினார்.

இதன்பின் ஆட்டம் இந்தியாவின் வசமானது. கடைசி ஓவரில் இலங்கை வெற்றிக்கு 13 ஓட்டங்கள் தேவைப்பட்டன. அந்த ஓவரை அக்சர் வீசினார்.

முதல் பந்தை அகலப்பந்தாக வீசினார். மூன்றாவது பந்தை சிக்ஸருக்கு பறக்கவிட்டார் சாமிக கருணாரத்ன. 3 பந்துகளில் 5 ஓட்டங்கள் தேவைப்பட அடுத்த இரண்டு பந்தில் ஓர் ஓட்டம் எடுத்த நிலையில், கசுன் ராஜித 5 ஓட்டங்களுடன் ரன் அவுட் ஆனார்.

ஒரு பந்தில் 4 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற நிலையில் ஓர் ஓட்டம் மட்டுமே எடுக்கப்பட்டது. இதனால் இரண்டு ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கையை இந்திய அணி வெற்றி கொண்டது.

24 வயதான ஷிவம் மாவி, தனது கடைசி ஓவரில் ஒரு விக்கெட் வீழ்த்தியதன் மூலம் அறிமுக போட்டியில் 4 விக்கெட்கள் எடுத்தார். முன்னதாக, இந்தியாவின் துடுப்பாட்டத்தில், தொடக்க ஆட்டக்காரர் இஷான் கிஷன் 37 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அணித் தலைவர் பாண்ட்யா 29 ஓட்டங்களில் வெளியேறினார்.

பின்னர் இணைந்த தீபக் ஹூடா 23 பந்துகளில் 41 ஓட்டங்களும், அக்சர் பட்டேல் 20 பந்துகளில் 31 ஓட்டங்களும் எடுத்தனர். இருவரும் கடைசி வரையில் தங்கள் விக்கெட்களை இழக்கவில்லை. இதில் ஹூடா 4 சிக்ஸர்களை விளாசினார்.

இலங்கையின் பந்துவீச்சாளர்கள் தரமான பந்துவீச்சை வெளிப்படுத்தியிருந்தனர். இதனால், இந்திய அணியை 162 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

இலங்கையின் பந்துவீச்சில், டில்ஷான் மதுசங்க, மஹீஷ் தீக்ஷன, சாமீக கருணாரத்ன, தனஞ்சய, வனிந்து ஹசரங்க ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். (ஐ)

# உதைபந்தாட்ட ஜாம்பவான் பீலேயின் உடல் அடக்கம்!

சாவோ பாவ்லோ, ஜன. 05

உதைபந்தாட்ட ஜாம்பவான் பீலேவின் உடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது. ஆயிரக்கணக்கான ரசிகர்கள் இறுதி ஊர்வலத்தில் பங்கேற்று அஞ்சலி செலுத்தினார்கள்.

3 முறை உலகக் கிண்ண உதைபந்தாட்ட சம்பியனான பிரேசிலின் ஜாம்பவான் பீலே (82), கடந்த டிசெம்பர் 29ஆம் திகதி மரணமானார்.

நேற்று அதிகாலை பீலேவின் உடல், அவர் தனது இளமை காலத்தில் உதைபந்தாட்டத்தில் விளையாடிய சாண்டோசில் உள்ள விலா பெல்மிரோ மைதானத்தில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

மைதானத்துக்கு வெளியே பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் சுமார் 3 மணி நேரத்துக்கும் மேலாக காத்திருந்து பீலேவின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

மைதானத்தின் நடுவே பந்தல் அமைக்கப்பட்டு அதன் உள்ளே பீலேவின் உடல்



பெட்டியில் வைக்கப்பட்டிருந்தது. அவரின் மகன் எடிசன், பிபா தலைவர் கியானி இன்பான்டினோ உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் அஞ்சலி செலுத்தினர்.

பீலேவின் உடல் வைக்கப்பட்டிருந்த பெட்டி மீது சாண்டோஸ் கிளப்பின் கொடியும், பிரேசில் நாட்டின் தேசியக் கொடியும் போர்த்தப்பட்டிருந்தது.

பிரேசில் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வா தனது மனைவி ரோசங்கலா ஜான்ஜாவுடன் இணைந்து வந்து அஞ்சலி செலுத்தினார். இதன் பின்னர் 'உதைபந்தாட்ட அரசன்' பீலேவின் உடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. சாண்டோஸ் தெருக்களின் வழியாக பயணித்த பீலேவின் உடலுக்கு சாலை நெடுகிலும் மக்கள் அஞ்சலி செலுத்தி அவருக்கு விடை கொடுத்தனர். நெக்ரோபோல் எகுமெனிகா நினைவிடத்துக்கு கொண்டு செல்லப்பட்ட பீலேவின் உடல் அங்குள்ள செங்குத்தான 14 மாடி கட்டடத்தில் அடக்கம் செய்யப்பட்டது. (ஐ)




## இலங்கைக்கு எதிரான தொடர் இந்திய அணியில் பும்ரா சேர்ப்பு

மும்பை, ஜன. 05

இலங்கை அணிக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடருக்கான இந்திய அணியில் வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரீத் பும்ரா சேர்க்கப்பட்டுள்ளார்.

தேசிய கிரிக்கெட் அக்கடமி உடற்தகுதி சான்றிதழ் வழங்கியதை தொடர்ந்து இந்திய அணிக்கு திரும்பியுள்ளார் பும்ரா.

பும்ரா, இந்திய அணிக்காக கடைசியாக கடந்த செப்ரெம்பர் மாதம் விளையாடி இருந்தார். இதன் பின்னர் முதுகு வலி காரணமாக அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற இருபது- 20 உலகக் கிண்ணத் தொடரில் இருந்து கடைசி நேரத்தில் விலகினார்.

இது தொடர்பில் இந்திய கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், "பயிற்சி மற்றும் சிகிச்சை எடுத்து வந்த பும்ரா தற்போது முழு உடற்தகுதியுடன் இருக்கிறார் என்று தேசிய கிரிக்கெட் அகாடமி சான்றிதழ் வழங்கியுள்ளது. இதைத் தொடர்ந்து அவரை, இலங்கைக்கு எதிரான 3 ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் கொண்ட தொடருக்கான இந்திய அணியில் தேர்வுக் குழுவினர் சேர்த்துள்ளனர். விரைவில் இந்திய ஒருநாள் கிரிக்கெட் அணியுடன் பும்ரா இணைவார்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அணிக்கு எதிரான முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டி எதிர்வரும்10ஆம் திகதி குவாஹாட்டியில் நடைபெறுகிறது. 2ஆவது ஆட்டம் 12ஆம் திகதி கொல்கத்தாவிலும், 3ஆவது ஆட்டம்15ஆம் திகதி திருவனந்தபுரத்திலும் நடைபெறுகிறது.

(ஐ)

# போராட்டகாரர்களுக்கு எதிராக மாபெரும் அவதூறுப் பிரசாரம்!

## வசந்த முதலிகே குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 05

தமது இயலாமையை மறைப்பதற்காகவும் தோல்வியை மூடி மறைப்பதற்காகவும் போராட்டக்கள செயற்பாட்டாளர்களுக்கு எதிராக பாரிய அவதூறு பிரசாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் வசந்த முதலிகே பொதுமக்களுக்கு பகிரங்க அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர்மேற்கண்டவாறு குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

வாழ்வதற்கான உரிமையை உறுதிப்படுத்துவதற்காக போராட்டத்தை தெரிவு செய்தோம். அதற்காக எந்தவித தியாகத்தையும் செய்வதற்கு மாணவர் இயக்கம் தயாராக உள்ளது.

உண்மையான பயங்கரவாதிகள் சுதந்திரமாக உள்ளபோது, பயங்கரவாதியாக முத்திரை குத்தப்பட்ட தான் சிறையில் இருந்த 135 ஆவது நாளே இந்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி. சிறந்த சமூகத்திற்காக போராடி, மாற்றத்திற்காக கோரிக்கை விடுத்தவர்களும் சிறையிலுள்ளனர்.

மக்கள் போராட்டத்தின் எதிர்பார்ப்புகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. 'ரணில் ராஜபக்ஸ ஜூன்டா' அரசாங்கம் தனது பணிகளை வழமை போன்று முன்னெடுத்துள்ளது- என்று குறிப்பிட்டுள்ளார். (அ)

# சீனாவுடனான உறவினால் நாம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளோம்

## அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ கவலை

கொழும்பு, ஜன. 05

**அம்பாந்தோட்டைத் துறைமுகம் தொடர்பாக சீனாவுடன் செய்துகொண்ட உடன்படிக்கையினால் பல நாடுகள் இலங்கையை தனிமைப்படுத்தியுள்ளன என அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.**



இதன் காரணமாகவே சர்வதேச நாணய நித்தியத்திடம் இருந்து கடனை பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்றும் நீதி அமைச்சர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தியா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட பல நாடுகள் உறவுகளை தொடர்ந்தும் பேணுவதற்கு விரும்பவில்லை.

2017 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தம் குறித்து விமர்சித்தமையால் நான் அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டேன்.

எதிர்வரும் 2 மாதங்களுக்கு சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி கிடைத்தாலும் அதனை கொண்டு நாட்டின் பொருளாதாரத்தை மாற்றியமைக்க முடியாது.

ஆகவே சர்வதேச முதலீட்டாளர்களை வரவழைக்க இலங்கை மீதான நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டும் - என்றார். (அ)

# நாணய நிதியத்தின் நிபந்தனைக்கு அமையவே மின்கட்டண அதிகரிப்பு

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா விளக்கம்

கொழும்பு, ஜன. 05

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைக்கு அமையவே மின்கட்டணத்தை அதிகரிக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

ஆகவே சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளவேண்டும் என்றால் அதன் நிபந்தனைகளை அமுல்படுத்தவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வரிகளை அதிகரிக்காமல் பொருளாதாரத்தை முன்னேற்றும் திட்டம் ஏதும் இருந்தால் தெரிந்தவர்கள் அதனை அரசாங்கத்துக்கு வெளிப்படுத்த முடியும் என்றும் அவர் கூறினார்.



பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளவேண்டுமாயின் கடினமான தீர்மானங்களை எடுக்கவேண்டும் என்றும் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தை உரிய காலத்தில் நாடாத காரணத்தினால் நாடு வங்குரோத்து நிலை அடைந்தது என குற்றம் சாட்டியவர்கள் தற்போது இவ்வாறு எதிர்ப்பை வெளியிடுவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று - என்றார். (அ)

# முஸ்லிம் கட்சிகள் கூட்டணியாக வேட்புமனு தாக்கல் செய்யவேண்டும்

## கோருகின்றார் ஹசன் அலி



கொழும்பு, ஜன. 05

முஸ்லிம் கட்சிகள் கூட்டணியாக வேட்புமனு தாக்கல் செய்யவேண்டும் என ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் ஹசன் அலி கோரிக்கை விடுத்துள்ளார்.

ஊடக அறிக்கை ஒன்றில் அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஒவ்வொரு உள்ளூராட்சி பிரதேசங்களிலும் உள்ள சமூக நலன் பேணும் அமைப்புகள், அரசியல்வாதிகள், புத்திஜீவிகள், உலமாக்கள், இளைஞர்கள் இணைந்து இந்த மாற்றத்திற்கான பாதையை வடிவமைக்க வேண்டும்.

தேர்தல் காலங்களில் ஊடுருவும் சமூக விரோத சக்திகளின் தொல்லைகளிலிருந்து தமது பிரதேசம் காப்பாற்றப்படும்.

பெரும் தேசிய அரசியலில் பங்காளிகளாக இருந்து அரசாங்கங்களை பலப்படுத்துவதற்கும் காப்பாற்றுவதற்கும் பேரம் பேசும் சக்தியை காவு கொடுத்து ஏமாந்த வரலாறு இனி புதைக்கப்படவேண்டும்- என்றார். (அ)

# இலங்கை விவசாயத் திணைக்கள வரலாற்றில் முதல் முறையாக பெண் பணிப்பாளர் நாயகம்

கொழும்பு, ஜன. 05

இலங்கை விவசாய திணைக்கள வரலாற்றில் முதல் தடவையாக பெண் ஒருவர் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு ஆரையம்பதியைச் சேர்ந்த பரசுராமன் மாலதியே இவ்வாறு நியமனம் பெற்றுள்ளார்.

இவர் கடந்த 2ஆம் திகதி தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)



# முள்ளிக்குளம் கடற்படை முகாமில் யானை தாக்கி சிப்பாய் உயிரிழப்பு!

மன்னார், ஜன. 05

மன்னார் முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள முள்ளிக்குளம் கடற்படை முகாமில் கடமையில் இருந்த கடற்படைச் சிப்பாய் ஒருவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை யானை தாக்கி உயிரிழந்தார்.

உயிரிழந்த கடற்படைச் சிப்பாய் பொல் பித்திகம மெலியா பிரதேசத்தைச் சேர்ந்த ஆர்.எம்.எஸ்.பி.ரத்நாயக்க (வயது - 41) என அடையாளம் காணப்பட்டுள்ளதாக சிலாவத்துறை பொலிஸார் தெரிவித்தனர். சடலம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளை சிலாவத்துறை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# தேர்தலுக்காக 20 பில்லியன் செலவழித்து 8000 பேருக்கு சம்பளம் வழங்க முடியுமா?

## கேள்வி எழுப்புகிறார் வஜிர அபேவர்த்தன



கொழும்பு, ஜன. 05

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் தேர்தலுக்காக 20 பில்லியன் ரூபா செலவழித்து 8 ஆயிரம் பேருக்குச் சம்பளம் வழங்க முடியுமா என பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன கேள்வி எழுப்பியுள்ளார்.

எதிர்க்கட்சிகள் பணம் அச்சிட்டாவது தேர்தலுக்குச் செல்லவேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தால் அது நாட்டை அராஜக நிலைக்கு கொண்டு செல்லும் என்றும் அவர் கூறினார்.

அத்துடன் இந்த வருடத்தில் பொருளாதார பிரச்னைக்கு தீர்வு காண்பதே ஜனாதிபதியின் இலக்கு என்றும் அதற்கு அனைவரும் ஆதரவளிக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நாட்டின் தேசிய பிரச்னைக்கு தீர்வு காண ஜனாதிபதி அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்திருந்தபோதும் எதிர்க்கட்சிகள் தொடர்ந்தும் அலட்சியப்படுத்திவருவதாக வஜிர அபேவர்த்தன சுட்டிக் காட்டினார்.

இந்நிலையில் தேர்தலை நடத்துமாறு வற்புறுத்தி நாட்டை பலப்படுத்தும் ஜனாதிபதியின் எதிர்பார்ப்புக்களை இல்லாமலாக்கவேண்டாம் என்றும் வஜிர அபேவர்த்தன கூறினார். (அ)

## உள்ளூராட்சி தேர்தல்....

எனவே, அதற்கான தேர்தலை மார்ச் 10இற்கு முன்னதாக நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறீரத்நாயக்க தெரிவித்தார்.

இதற்காக, நேற்று புதன்கிழமை மாவட்ட தெரிவித்தாட்சி அலுவலர்களால் 340 உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்புமனுக்கள் வெளியிடப்பட்டது. (ஐ)

## தமிழ்த்....

உள்ளது. இந்தப் பேச்சு தொடர்பான முன்னாயத்த நடவடிக்கையாகவே இந்த சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் இன்று மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

சர்வ கட்சி சந்திப்பின் பின்னர் கடந்த டிசெம்பர் 21ஆம் திகதி தமிழ்த் தேசியத் தரப்பு கட்சிகளை ஜனாதிபதி சந்தித்தார். இந்த சந்திப்புக்கான அழைப்பை பங்காளிக் கட்சிகளான புளொட், ரெலோவுக்கும் மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் விக்னேஸ்வரன் எம். பிக்கும் சுமந்திரன் எம். பியே விடுத்தார்.

போதிய அவகாசம் இல்லாத அதே சமயம், தமக்கு உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுக்கப்படாதது குறித்து அன்றைய தினம் மாலை விக்னேஸ்வரன் எம். பி. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் ஒன்றை எழுதியிருந்தார். இந்த நிலையிலேயே இன்றைய சந்திப்புக்கு தமிழ்த் தேசிய கட்சிகளின் சகல தலைவர்களுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே நேரடியாக அழைப்பை விடுத்துள்ளார்.

இன்றைய சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், எம். ஏ. சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், த. சித்தார்த்தன் ஆகியோர் பங்குபற்றுவர். க. வி. விக்னேஸ்வரன் இந்தியா சென்றுள்ளமையால் இந்த சந்திப்பில் பங்கேற்க மாட்டார் என்றும் அறிய முடிகிறது.

இதேவேளை, இன்றைய சந்திப்பில் அரச தரப்பில் அமைச்சர்கள் டக்ளஸ் தேவானந்தா, விஜயதாஸ ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோரும் பங்கேற்பர் என்று கூறப்படுகின்றது. (ஐ)

## இணக்கத்துகான....

யும் கோரப்பட்டுள்ளது.

இதனிடையே, புதிய முதல்வர் தேர்வு நடைபெற்றால் தாம் நீதிமன்றத்தை நாடுவார் என்று மணிவண்ணன் டான் தொலைக்காட்சியின் ஸ்பொட்லைற் நேர்காணல் நிகழ்ச்சியில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், யாழ்ப்பாணம் மாநகர சபையில் ஏற்பட்டுள்ள நிலைமைகளை இணக்கப்பாட்டுடன் முடிவுக்குக் கொண்டுவர வடக்கு மாகாண ஆளுநரின் அறிவுறுத்தலுக்கமைய ஆளுநரின் செயலாளரால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்கும் எண்ணம் தமக்கு இல்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாநகர சபை உறுப்பினர்கள் சிலர் எமக்கு தெரிவித்தனர்.

மேலும், யாழ். மாநகர சபை விடயத்தில் தன்னால் சபையைக் கொண்டு நடாத்த முடியாத நிலையில் - தன் இயலாமை காரணமாக முதல்வர் பதவியில் இருந்து விலகி - சட்டத்தைச் சவாலுக்கு உட்படுத்தும் ஒருவருக்காக, உள்ளூராட்சி சபைகள் கட்டளைச் சட்டத்துக்குப் புறம்பாக முதல்வர் தேர்தலை நடத்தாமல் இருப்பது ஜனநாயக உரிமை மீறலாகும். அதை விட அத்தகையதொரு முதல்வரோடு சமரசம் பேசச் செய்வதையும் ஏற்றுக் கொள்ள முடியாது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

தவிர, எம்மை அழைத்து சமரசம் செய்ய முனையும் ஆளுநரின் முயற்சிக்கு நாம் துணைபோகத் தயாரில்லை என்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமை இது குறித்து எமக்கு எந்த விதமான அறிவுறுத்தலையும் இதுவரை வழங்கவில்லை. கட்சித் தலைமையின் முடிவுக்கமைய நாம் நடந்து கொள்வோம். ஆயினும், கட்சித் தலைமை ஆளுநர் அலுவலகக் கூட்டத்துக்குச் செல்லுமாறு பணிக்காமல் நாம் ஆளுநரின் செயலாளரால் அழைக்கப்பட்ட கூட்டத்துக்குச் செல்ல மாட்டோம் - என்றும் கூறினார். (ஐ)

## பரந்த....

குழுவில் எடுக்கப்படும் என்று பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ சுமந்திரன் தெரிவித்தார்.

நேற்று அவர் யாழ்ப்பாணத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

முன்னதாக, தமிழ் தேசிய கட்சிகள் ஒன்றிணைந்து போட்டியிடுவதில்லை எனது அரசியல் குழுவில் முடிவெடுக்கப்பட்டதாக, எம். ஏ. சுமந்திரன் முன்னர் தெரிவித்திருந்தார். எனினும், அவ்வாறான முடிவு எடுக்கப்படவில்லை என கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா உள்ளிட்டவர்கள் தெரிவித்தனர். இந்த நிலையிலேயே அவர் தற்போது இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

மேலும், உள்ளூராட்சி தேர்தல் வேட்புமனு தாக்கல் திகதி அறிவிக்கப்பட்டாலும், தேர்தலை பிற்போட சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படக்கூடும். அப்படியான நடவடிக்கைகள் எடுத்தால் உடனடியாக நீதிமன்றத்தை நாடுவோம் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## இம்மாதம்....

வுள்ளனர். இதேசமயம், 6 மாகாணங்களுக்கு புதிய ஆளுநர்களும் நியமிக்கப்படுவர் என்று அரசாங்கத்தின் உயர்வட்டாரங்கள் தெரிவித்தன.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவால் அமைச்சு பதவி வழங்க சிபாரிசு செய்யப்பட்டவர்கள் தொடர்பில் ஜனாதிபதிக்கு அதிருப்தி காணப்பட்டதாகவும், இதனால், அமைச்சரவை மாற்றம் தாமதமானதாகவும் தற்போது இந்த விடயம் தீர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, நாமல் ராஜபக்ஷவுக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சு பதவி வழங்குவதற்கு ஜனாதிபதி முன்வந்துள்ளார். ஆனால், இதுவிடயத்தில் இறுதி இணக்கப்பாடு எட்டப்படவில்லை எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

## சரணடைந்த....

சட்டம் மூலமாக கேள்வி எழுப்பியிருந்தார்.

1111/2022 என்ற இலக்கத்தை கொண்ட தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழான மேன்முறையீடு, தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் தலைவர் நீதியரசர் உபாலி அபேவர்த்தன தலைமையில் நேற்றைய தினம் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டது. இதன்போதே இலங்கை இராணுவம் இவ்வாறு தெரிவித்திருந்தது.

மேலும், "பொறுப்பு வாய்ந்த இராணுவம் என்கிற வகையில் முழுமையான, சரியான தகவல்களை இம்மாதம் 17ஆம் திகதிக்கு முன்னர் வழங்குவதாக" இதன்போது இராணுவம் கூறியது. (ஐ)

## உள்ளூராட்சி....

- இந்த விடயத்தை சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரான தயாசிறி ஜயசேகர எம். பி. தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை கோரும் திகதி தேர்தல்கள் ஆணைக்குழுவால் நேற்று அறிவிக்கப்பட்டது.

இதையடுத்தே இந்த தேர்தலை ஒத்தி வைப்பதற்கான யோசனை ஒன்று பாராளுமன்றில் இன்று முன்வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அவ்வாறு அரசாங்கம் இந்த யோசனையை முன்வைத்தால், அதற்கு எதிராக தாங்கள் வாக்களிப்போம் என்றும் தயாசிறி ஜயசேகர மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# உள்ளூராட்சி தேர்தல் தொடர்பில் எந்த நடவடிக்கையிலும் ஈடுபடேன்!

## ஜனாதிபதி ரணில் கூறினாராம்

கொழும்பு, ஜன. 05

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான எந்தவொரு நடவடிக்கைகளிலும் தான் ஈடுபடப் போவதில்லை என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார் என்று ஐக்கிய தேசியக் கட்சி கூறியுள்ளது.

கொழும்பில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்களை நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடல்களை நடத்திய போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் இரண்டு வருடங்களில் நாட்டை அபிவிருத்தி பாதைக்கு கொண்டு செல்வதற்கே தனக்கு ஆணை வழங்கப்பட்டுள்ளதாகவும், தேர்தல்களில் ஈடுபட தனக்கு ஆணை வழங்கப்படவில்லை எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தனக்கு வழங்கப்பட்டுள்ள ஆணையை மீறி செயல்படுவதற்கு நான் தயாரில்லை.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானிக்கும் பட்சத்தில், கட்சியின் மரபுக்கு அமைய, செயல்குழுவின் தலைவராக மாத்திரமே தலைமை வகிக்கத் தயார் என்று இதன்போது ஜனாதிபதி கூறினார்.

அத்தோடு, உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பிலான எந்தவொரு நடவடிக்கைகளிலும் ஈடுபடப் போவதில்லை. இந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானிக்குமானால், 40 வீதமான புதுமுக வேட்பாளர்களை களமிறக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார் என்று கூறப்பட்டது. (ஐ)

## உள்ளூராட்சி தேர்தல் தொடர்பாக....

மாணி அறிவித்தல் வெளியாகும் தினம் அண்மித்துள்ள நிலையில், தேசிய தேர்தல் ஆணைக்குழுவுக்குள் ஏற்பட்டுள்ள உள்ளக பிளவுகளை கருத்தில் கொண்டே அரசாங்கம் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமால் புஞ்சிஹேவாவுடன் ஒரு சிலர் மாத்திரம் உள்ளனர். இதனால், எதிர்வரும் நாட்களில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து உடனுக்குடன் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளவுள்ளதாக அரசாங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று ஒரு தரப்பினர் தெரிவிக்கும் நிலையில், பிறிதொரு தரப்பினர் நிதி நெருக்கடி காரணமாக தேர்தல் நடத்தப்படக்கூடாது என்று கூறுவதே பிளவுக்கு அடிப்படை என்று கூறப்படுகின்றது.

தேர்தலை நடத்துவது தொடர்பில் ஆணைக்குழுவுக்குள் இரு வேறுபட்ட நிலைப்பாடுகள் காணப்படுகின்றன. இது, வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டாலும் தேர்தலை நடத்துவதில் பல்வேறு சிக்கல்கள் எழலாம் என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் கருத்துகளை வெளியிட்டுள்ளன.

தேர்தலை நடத்துவதற்கு ஆயிரத்து 200 கோடி ரூபாய் செலவாகும் என்று கணிப்பிடப்பட்டுள்ள போதிலும், வரவு - செலவு திட்டத்தில் ஆயிரம் கோடி ரூபாய் மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, மேலதிக செலவுகளை முகாமைத்துவம் செய்வது கடினமாகும் என்பது பெருமளவானோரின் நிலைப்பாடாக வுள்ளது.

தேர்தலின்போது தேர்தல் கடமைகளில் ஈடுபடும் அரச உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவுகள், அவர்களுக்கான உணவு மற்றும் எரிபொருளுக்கான கொடுப்பனவுகள் என்பவற்றுக்கு திறைசேரியினால் நிதி வழங்கப்படாவிட்டால் தேர்தல் கடமைகளை நிறைவேற்றுவதில் பெரும் சிக்கல்கள் ஏற்படும் என்று அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே இந்த சிக்கல் தொடர்பில் நிதி அமைச்சுடன் கலந்துரையாடி, நிதி வழங்கப்படும் என்ற உறுதிப்படுத்தலைப் பெற்றுக் கொள்ளாமல் தேர்தலுக்கான தினத்தை அறிவிக்க வேண்டாம் என்று தேர்தல் ஆணைக்குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனினும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் அவருடனுள்ள சிறு தரப்பினர் தேர்தலை நடத்துவதற்கு தேவையான நிதியை நிதி அமைச்சு வழங்கும் என்று கண் மூடித்தனமாக நம்புவதாக ஆணைக்குழுவின் மூத்த உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இந்நிலையில், தேர்தல் ஆணைக்குழுவில் ஏற்பட்டுள்ள தற்போதைய பிளவு தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் உடனடியாக சட்டமா அதிபரின் ஆலோசனைகளைப் பெறத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அரசின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## 200 ரூபாயால்....

தினம் எரிவாயுவின் விலை குறையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய 12.5 கிலோ கிராம் சமையல் எரிவாயுவின் விலை 200 - 300 ரூபாயால் குறைவடையலாம் என்றும் அவர் கூறினார்.

கடந்த டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி 12.5 கிலோ எரிவாயுவின் விலை 250 ரூபாயாலும், 5 கிலோ எரிவாயுவின் விலை 100 ரூபாயாலும், 2.3 கிலோ எரிவாயுவின் விலை 45 ரூபாயாலும் அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பிரச்னை....

வயது மூப்பு - நோய் காரணமாக தளர்வுற்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை நேற்றைய தினம் அவரின் இல்லத்துக்கு சென்று முன்னாள் ஜனாதிபதியும் பிரதமருமான மகிந்த ராஜபக்ஷ சந்தித்தார். நல விசாரிப்பு சந்திப்பாக அமைந்த இந்த சந்திப்பில் சமகால அரசியல் தொடர்பிலும் இருவரும் பேசினர்.

இதன்போது சம்பந்தன், மகிந்த ராஜபக்ஷவிடம் சுதந்திர தினத்துக்கு முன்னர் இனப் பிரச்னைக்கு தீர்வு காணும் நோக்கில் பேச்சு நடக்கிறது. முன்வைக்கப்படும் இனப் பிரச்னைத் தீர்வுக்கு முழுமையான ஆதரவை நீங்கள் அளிக்க வேண்டும்", என்று கோரினார்.


இதற்குப் பதிலளித்த மகிந்த ராஜபக்ஷ, "இனப் பிரச்னைக்கு என்ன தீர்வு எட்டப்படவுள்ளது என்பது தெரியவில்லை. எனவே, தீர்வை ஆதரிப்பதா அல்லது இல்லையா என்பதை இப்போது கூறமுடியாது. ஆனால், சாதகமாகப் பரிசீலிப்பேன்", என்று சம்பந்தனிடம் தெரிவித்தார்.

இதேவேளை, தமிழர் பிரச்னை தொடர்பில் எதிர்வரும் 10ஆம் திகதி முதல் நடைபெறவுள்ள மூன்றுநாள் சர்வகட்சி மாநாட்டில், பொதுஜன பெரமுனவும் பங்கேற்கும் என்று மகிந்த ராஜபக்ஷ இந்த சந்திப்பில் தெரிவித்திருந்தார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# நாட்டில் ஆட்சி கவிழ்ப்பின் பின்னணியில் இராணுவம்!

## எல்லே குணவன்ஸ தேரர் குற்றச்சாட்டு



**கொழும்பு, ஜன. 05**

**இலங்கையில் போராட்டத்தின் ஊடாக ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான சூழ்ச்சித் திட்டத்தின் பின்னணியில் இராணுவமும் செயற்பட்டது எனப் பரபரப்பான குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார் எல்லே குணவன்ஸ தேரர்.**

இராணுவத்தின் பிரதானிகள் சிலரே இதன் பின்னணியில் செயற்பட்டனர் எனவும், அவர்கள் தொடர்பான விவரங்களை வெளியிட முடியாது எனவும் தேரர் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் பலவீனமான நிலையை உருவாக்குவதற்கான பேச்சுகள் அமெரிக்கத் தூதரகத்தில் இடம்பெற்றன. இதில் இலங்கை இராணுவ அதிகாரிகள் பங்கேற்றிருந்தனர். போர்க் குற்றச்சாட்டு விவகாரத்தை காண்பித்து இராணுவ அதிகாரிகளை, தமது பக்கம் இழுத்துள்ளனர்.

அரச சொத்துகள் தீக்கிரையாக்கப்படும்போது இராணுவம் ஏன் அமைதி காத்தது? கடைசி நேரத்தில் ஜனாதிபதியின் உத்தரவைக்கூட பாதுகாப்பு தரப்பு ஏற்கவில்லை. அமெரிக்க தூதுவர், தூதுவர் போல் செயற்படவில்லை. அவர் நலன்புரி அமைப்பொன்றின் செயலாளர் போல்தான் செயற்பட்டு வருகின்றார். ஏனைய சில தூதரகங்களும் இதனுடன் தொடர்புபட்டிருந்தன.

நாட்டில் நெருக்கடி நிலைமை இருந்தது. அதனை சர்வதேச சக்திகள் பயன்படுத்திக்கொண்டன. உண்மையாக போராட்டத்தில் ஈடுபட்டவர்களும் இருக்கின்றனர். அதன்பின்னர் சர்வதேச சக்திகள் புகுந்தன. றோ அமைப்பு, சி.ஐ.ஏ. போன்ற புலனாய்வு அமைப்புகளும் இறங்கின. டயஸ்போராக்களும் இருந்துள்ளனர்-என்றார். (அ)



# அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் வழங்க நிதியில்லை

## இந்த நேரத்தில் தேர்தல் தேவையா என்கிறார் மனுஷ நாணயக்கார

யாழ்ப்பாணம், ஜன. 05

அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் கொடுக்க நிதி இல்லை இந்த நேரத்தில் தேர்தல் நடத்தப்படவேண்டுமா? என்பதை தேர்தல் ஆணைக்குழு தீர்மானிக்கும் என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட அமைச்சர் தேர்தல் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தல் தினம் தீர்மானிப்பது? தேர்தல் நடத்துவதா இல்லையா என்பதை தீர்மானிப்பது ? அல்லது தேர்தலுக்குரிய பணத்தை எங்கே பெறுவது என தீர்மானிப்பது தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் கடமையாகும்.

ஆனால் தேர்தல் ஆணைக்குழு தேர்தல் என்று அறிவித்தால் தேர்தலுக்கு தயாராக இருக்கின்றோம். தற்போது நாட்டை நடத்துவதற்கு பணம் இல்லை.

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்குக்கூட பணம் இல்லை. பாடசாலை மாணவர்களுக்கு தேவையான பாடசாலை சீருடை,பாடசாலை உபகரணங்களைக் கொள்வனவு செய்யக்கூட பணம் இல்லை.

அத்தியாவசிய பொருட்களின் விலை மற்றும் போக்குவரத்து சேவை மற்றும் ஏனைய செலவுகளை சமாளிப்பதற்கு கூட நாட்டில் பணம் இல்லாத நிலை காணப்படுகிறது.

சீரமைக்கவேண்டிய பாதைகள் மற்றும் பழுதடைந்த பாதைகளைக்கூட திருத்த நிதி இல்லாத நிலையில் தேர்தல் நடத்தப்படவேண்டுமா இல்லையா என்பதை தேர்தல் ஆணைக்குழு தீர்மானிக்கும்.

தேர்தல் ஆணைக்குழு இவ்வாறான நிலையில் தேர்தலை நடத்துவதற்கு தீர்மானித்து நிதியைத் தேடி நடத்த தயாராக இருந்தால் நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

அதனை நாங்கள் தீர்மானிக்க முடியாது.தேர்தல்கள் ஆணைக்குழுவே தீர்மானிக்க முடியும்-என்றார். (அ)

# சகல மருத்துவமனைகளுக்கான முட்டை விநியோகம் நிறுத்தம்!


கொழும்பு, ஜன. 05

நாட்டின் மருத்துவமனை அமைப்பிற்கான முட்டை விநியோகம் தற்போது முற்றாக நிறுத்தப்பட்டுள்ளதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் மன்றம் தெரிவித்துள்ளது.

முட்டையின் விலை அதிகரித்துள்ளதையடுத்து விநியோகத்தர்களுக்கு வைத்தியசாலைகளுக்கு முட்டை வழங்குவதை நிறுத்தியதால் இந்த நிலை ஏற்பட்டதாக மன்றத்தின் தலைவர் மருத்துவர் ருக்ஷான் பெல்லானா தெரிவித்துள்ளார் . நாட்டின் சகல மருத்துவ மனைகளிலும் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக, தீவிர சிகிச்சை பிரிவு மற்றும் தீக்காயப் பிரிவுகளில் சிகிச்சை பெறும் நோயாளிகள், நீரிழிவு நோயாளிகள், சிறப்பு உணவு வழங்கப்பட வேண்டிய நோயாளிகள், புரதச் சத்து குறைபாடு மற்றும் ஊட்டச்சத்து குறைபாட்டால் அவதியுறும் நோயாளிகள் போன்றவர்களுக்கும்கூட முட்டை கொடுக்க முடியவில்லை என அவர் தெரிவித்துள்ளார். .

கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு வாரத்துக்கு 10 ஆயிரம்



முட்டைகளும் , லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்கு வாரத்திற்கு 12 ஆயிரம் முட்டைகளும் தேவைப்படுகின்றன என்று தெரிவித்துள்ள அவர் அரசு உடனடியாக முட்டைகளை இறக்குமதி செய்ய வேண்டும் அல்லது மருத்துவ மனைகளுக்கு முட்டை வழங்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# புதிய வரி சட்டமூலத்துக்கு எதிரான மனு 11 ஆம் திகதி ஜனாதிபதியிடம்

கொழும்பு, ஜன. 05

புதிய வரிச் சட்டமூலத்திற்கு எதிரான மனுவை எதிர்வரும் 11 ஆம் திகதி ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

குறித்த மனுவில் கையொப்பமிடும் பணி தற்போதும் இடம்பெற்று வருவதாக ஊடகக் குழுவின் உறுப்பினர் சமில் விஜேசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நியாயமற்ற வரித் திருத்தத்துக்கு எதிராக மருத்துவர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் பல போராட்டங்களை நடத்தியுள்ளனர்.

இதனூடாக இந்த நியாயமற்ற வரித் திருத்தத்தை மாற்றி நாட்டில் நியாயமான வரிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவார்கள் என்று நம்புகிறார்கள்.

அதன் ஒரு கட்டமாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் 20,000 வைத்தியர்களின் கையொப்பம் அடங்கிய மனுவொன்றை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கத் தீர்மானித்துள்ளது.

இதன்படி அனைத்து வைத்தியசாலைகளிலும் உள்ள சிறப்பு வைத்தியர்கள் உட்பட அனைத்து வைத்தியர்களும் இந்த மனுவில் கையெழுத்திடுகின்றனர்-என்றார்.

# விமானப்படைத் தளபதிக்கு ஜனாதிபதியால் சேவை நீடிப்பு

கொழும்பு, ஜன. 05

விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்சன் பத்திரனவுக்கு சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்தச் சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் ஜூன் மாதம் 30ஆம் திகதி வரை அவருக்கு 6 மாத சேவை நீடிப்பு வழங்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார். (அ)

# கதிர்காமம்-கொழும்பு இடையிலான அரைச்சொகுசு பஸ்சேவை நிறுத்தம்

கொழும்பு, ஜன. 05

கதிர்காமம் மற்றும் கொழும்புக்கு இடையில் இயங்கும் அரை சொகுசு பஸ் சேவை நேற்று நள்ளிரவு முதல் நிறுத்தப்பட்டுள்ளது என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அந்த பாதையில் வழமையான பஸ்கள் மற்றும் சொகுசு பஸ்கள் வழமையாக இயங்குவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (அ)

# சூரிய மின்கலம் மீதான வரி நீக்கம்!

கொழும்பு, ஜன. 05

சூரியப்படலம் நிலையான மாற்றிகள், இன்வேர்ட்டர்கள் மீதான துறைமுகம் மற்றும் விமானப் போக்குவரத்து வரி நீக்கப்பட்டுள்ளது.

நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய ருவிட்டரில் இதனைத் தெரிவித்துள்ளார்.

2023 ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த வரி நீக்கம் அமுலாகுமென அவர் மேலும் கூறியுள்ளார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.01.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் உளவள துனையாளர் -யாழ் பாவாணன்
7.10 மணி: இயற்கைவழி-எஸ்.உதயசீலன்-சமுர்த்தி உத்தியோகஸ்தர்
7.15 மணி : கதைவழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.00 மணி : தொடர் நாடகம்
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ - மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : Jolly Oh Gimgana - நேரலை
1.00 மணி : உதவும் கரங்கள்-மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-
திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை




**இரவு**
7.00 மணி : சமையல் சமையல்



7.30 மணி : வெள்ளிடை நுட்பம் தொழில்நுட்பம் பயன்பாடுபற்றிய நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : கச்சேரி ஆரம்பம்-இசை நிகழ்ச்சி
10.00 மணி : BLACK AND WHITE

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகக்கோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள்
(மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை
(சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை
(திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம்
(மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு